விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 22 திங்கட்கிழமை (06.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 77

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# புலிகளின் அறிக்கை குறித்து ஜனாதிபதி மகிந்த அதிர்ச்சி

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சில் விடுதலைப்புலிகளால் கையளிக்கப்பட்ட அறிக்கையை பார்வையிட்ட மகிந்த ராஜபக்ஷ அதிர்ச்சியடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் வைத்து புலிகளின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அதில் விடுதலைப்புலிகளால் கையளிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது. இதேவேளை ஜெனீவாப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளால் கையளிக்கப்பட்ட ஆவணங்களினால் அரசியல் கட்சிகளிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தால் அடுத்தகட்டப் பேச்சு கேள்விக்குறியாகும்

## க.கா.குழுத்தலைவர் அச்சம்

(கொழும்பு)

வவுணதீவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி மீது இடம் பெற்ற தாக்குதல் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு மற்றுமொரு தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் போது இருதரப்பினரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உறுதி மொழிகளை இச் சம்பவம் குறைத்து மதிப்பிடுவதை எடுத்துக்காட்டுவதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்களும் கொலைகளும் தொடருமேயானால் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் கேள்விக்குறியாகிவிடுமோ என்று அஞ்சுவதாகவும் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் யுத்த நிறுத்தத்தினை கடைப்பிடிப்பதோடு, கூட்டறிக்கையின் இணக்கப்பாட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவும் முன்வரவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வவுணதீவில் உள்ள விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடி மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின் போது இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கல்விச்சமூகத்தினருக்கு இராணுவத்தினரால் ஆபத்து

## கஜேந்திரன் எம்.பி.ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கல்விச் சமூகத்தினருக்கு இராணுவத்தினரால் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த 28.02.2006 அன்று யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரிமாணவர்கள் இரண்டு பஸ்களில் முகமாலைச் சோதனைச்சாவடி ஊடாக விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கு சென்று திரும்பி வந்தமை தொடர்பாக இராணுவத்தினர் மாணவர்கள் மீதும் அவர்களுடன் சென்று வந்த ஆசிரியர்கள் மீதும்,அதிபர் மீதும் பாரிய கெடுபிடிகளையும் மிரட்டல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் குடாநாட்டில் உள்ள அனைத்துப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியில் குழப்பநிலை தோன்றியுள்ளது. 522 ஆவது பிரிகேட் தளத்தில் இருந்து பாடசாலைக்குச் சென்ற இராணுவப் புலனாய்வுத்துறையினர் 28 ஆம் திகதியும் மறுநாளும் நீண்ட நேரம் அதிபரை கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அத்துடன் மூன்று மணி நேரம் தமது படைமுகாமில் வைத்து மிரட்டியுள்ளதுடன் மாணவர்கள் விடுதலைப்புலிகளால் வன்னிப்பகுதியில் உள்ள அவர்களின் பயிற்சி முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்று எழுதித்தர வேண்டுமென்றும் மிகக்கடுமையாக மிரட்டியுள்ளார்.

இதனால் கல்விச் செயற்பாடுகள் பெருமளவு (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்களால் நேற்றும் கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விச் சமூகத்தின் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடு அதிகரிக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றும் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் கொடும்பாவியை கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரியில் இருந்து இழுத்து வந்த மாணவர்கள் கலட்டிச் சந்தியில் போட்டு கொழுத்தினர்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இச் சம்பவத்தின் போது கலட்டிச் சந்தியில் இராணுவத்தினர் குவிக்கப்பட் டனர். இதனால் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. (ச-5)

# மாணவர் சமூகத்தினரால் இன்று வகுப்பு பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைய சில நாட்களாக மாணவர்கள் மீதும் கல்விச்சமூகத்தினர் மீதும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து இன்று மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மாணவர்களை பாடசாலைக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உயர் கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர்களின் வித்துடல் விதைப்பு

வவுணதீவில் இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் இணைந்து விடுதலைப்புலிகளின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை தவபாலன், வீரவேங்கை சுமன் ஆகிய இருவரது வித்துடல்களும் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதை யுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

இரு மாவீரர்களினதும் வித்துடல்களும் அவர்களது இல்லங்களில் வைக்கப்பட்டு பின்னர் அஞ்சலிக்காக தாண்டியடி அ.த.க.பாடசாலையில் வைக்கப்பட்டது.

அங்கு தாண்டியடி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஆ.தமிழ்ச்செல்வன் தலைமையில் வீரவணக்கக்கூட்டம் இடம் பெற்றது.

பின்னர் தாண்டியடி மாவீரர் துயிலும் இல் லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூரண இரா ணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது. (ச-4)



# க.கா.குழுத் தலைவர் நியமனம் குறித்து ஹெல உறுமய கவலை

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவுக்கு தலைவராக சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதற்கு ஜாதிக ஹெல உறுமய தனது கவலையை வெளியீட்டுள்ளது.

இந்த நியமனத்தை அனுமதிப்பதன் மூலம் நோர்வேயின் சதிவலைக்குள் அரசாங்கம் வீழ்த்துவிடக்கூடாது என்றும், அரசாங்கத்திற்கு அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளை ஐரோப்பாவில் தடைசெய்யும் முயற்சிகள் உட்பட புலிகளுக்கெதிரான உணர்வலைகள் பரவுவதைக்கூட சுவீடனின் தலைமை குறுக்கீடு செய்ய முடியும். இவ்வாறு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் வண.ஒமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நோர்வேயை போலன்றி சுவீடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் முழு உறுப்புரிமையுடைய நாடு. இதனால் புலிகளைத் தடைசெய்யும் எந்தவொரு நடவடிக்கையையும் சுவீடன் ஆதரிக்கப்போவதில்லை. சுயாதீனமான கண்காணிப்புக் குழுத்தலைமைப்பதவியை வகித்துக்கொண்டு தனது நற்பெயரை அது ஆபத்திற்குள்ளாக்கமுடியாது.

இந்நிலையில், புலிகளுக்கெதிரான செயற்பாடுகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிறைவேற்றுவதற்கு கண்காணிப்புக் குழுத் தலைவராக சுவீடன் நாட்டவர் நியமிக்கப்பட்டமை ஒரு தடைக் கல்லாகும் என்றார்.

இதேவேளை, ஹெல உறுமய அண்மைக் காலத்தில் வெளிக்காட்டிவரும் விரோதப் போக்கு அரசுத்தலைமையை யோசிக்க வைத்துள்ளது.

ஜெனீவா பேச்சுக்களின் பெறுபேறுகளால் ஹெல உறுமய போர்க்கொடி தூக்கியிருப்பதை முன்னிட்டே கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த சர்வ கட்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க. வின் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். (க-6)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கை அடுத்த வாரம்!

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியம் தனது இறுதி அறிக்கையினை அடுத்த வாரம் வெளியிடவுள்ளது.

இதனை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுத்தலைவர் ஜோன் குஷ்னகான் அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு பிரதிநிதி அலுவலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது. இன்று இலங்கை வரும் குஷ்னகான் 9ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார். இக்காலத்தில் அரசாங்க, எதிர்க்கட்சித்தலைவர் உட்பட ஏனைய அரசியல் கட்சிப்பிரதிநிதிகளையும், தேர்தல்கள் ஆணையாளர் சமூகப் பிரதிநிதிகள், சர்வதேசப் பிரதிநிதிகள் ஆகியோரையும் குஷ்னகான் சந்திக்கவுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளையும் குஷ்னகான் சந்திக்க எண்ணியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புப் பிரதிநிதிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாளை மறுதினம் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தி கடந்த நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளின் இறுதி அறிக்கையினை குஷ்னகான் வெளியிட எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-4)

## கூட்டங்களும் நிர்வாகிகள் தெரிவும்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தினரால் பிரதேச அலகு கூட்டங்கள் நடத்தப்பட்டு, அலகிற்கான நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

பிரிவின் தலைவர் ச.திரவியராசா தலைமையில் நடத்தப்பட்டு வரும் அலகிற்கான தெரிவுக்கூட்டங்களில் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய விளக்கங்களை பிரிவின் செயலாளர் அ.ரெனிஸ்லாஸ் விளக்கி வருகின்றார்.

செம்பியன்பற்று பிரிவின் அலகிற்கான தலைவராக ப.நடராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (க-43)

# வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதில் சிக்கல் நிலை

(வவுனியா)

உள்ளூராட்சித் தேர்தலுக்கு பாதுகாப்பற்ற பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்களில் வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்படுவது தொடர்பில் இன்னமும் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் எ.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து வடகிழக்கு தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தேர்தல் ஆணையாளருடன் கலந்துரையாடவுள்ளதாக வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா செயலகத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வாக்காளர் மறுசீரமைப்புக்கு அமைவாக வடக்கு-கிழக்கு 209 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். அவற்றில் 75 வாக்காளிப்பு நிலையங்கள் பாதுகாப்பற்ற பகுதிகளிலேயே அமைந்துள்ளது.

அவற்றை நிறுவுவது தொடர்பாக தேர்தல் ஆணையாளரே இறுதி முடிவு எடுக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (த-9)

# சம்பள நிலுவை வழங்கல்

வடமராட்சி கல்வி வலயத்தில் பணியாற்றும் அதிபர்களுக்கான சம்பவ நிலுவையாக மூன்று கோடி ரூபா கடந்த ஜனவரி மாதத்திலிருந்து பகிர்ந்து அளிக்கப்பட்டதென வடமராட்சி வலய கணக்காளர் கே.சந்திரசேகரம் தெரிவித்தார்.

அதிபர்களுக்கு 6-10-1994 தொடக்கம் 31-12-1996வரையான காலப்பகுதியில் வழங்கப்படாமல் இருந்துவந்த நிலுவை இப்போது வழங்கப்பட்டது.

இப்போது அதிபர்களுக்கு எந்தச் சம்பள நிலுவையும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-35)

# இராசி பலன்

**06.03.2006**
**(மாசி 22, திங்கட்கிழமை)**
**சப்தமி முன்னிரவு 7.34மணிவரை**
**கார்த்திகை முற்பகல் 8.45மணிவரை**
**இராகுகாலம் 7.55-9.25மணிவரை**
**சுபநேரம் 12.25-01.55 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கோபபடுதல், எடுத்தகாரியம் தாமதமாகும், அதிக செலவு, திடீர் நன்மை. |
| இடபம் | கற்பனை மிகுதி, புதிய திருப்பம், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| மிதுனம் | பூர்வ புண்ணிய கருமம், உறவினர் வெறுப்பு, சுபசெலவு, பித்தரோகம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, சகோதரர் உதவி, உடல்நலம். |
| சிங்கம் | கடின உழைப்பு, காரிய அனுகூலம், நல்ல வரவேற்பு, அதிகாரம். |
| கன்னி | புதிய திட்டமிடல், பிரயாணம், பிதாசிந்தை, முயற்சி தாமதம். |
| துலாம் | அபகீர்த்தி, முயற்சி தடங்கல், வாகன பயம், உடல்நலக்குறைவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், அபூர்வ சந்திப்பு, ஆரோக்கியம், போசன சுகம். |
| தனுசு | மாதர் நட்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், பொருள் சேர்க்கை. |
| மகரம் | வியாபார நன்மை, பணவிரயம், இடமாற்றம், அதிக வார்த்தை. |
| கும்பம் | முயற்சி தாமதம், உஷ்ண வியாதி, தாய் வழி உறவு, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | பிரயாண நன்மை, உறவினர் உதவி, போசன சுகம், உடல்நலம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# 14 மாதங்களில் 5000வீடுகளே கட்டி முடிக்கப்பட்டதாம்

இலங்கையில் ஆழிப்பேரலை ஏற்பட்டு 14 மாதங்கள் ஆனபின்னரும் 5 ஆயிரம் வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் அனுமதித்திருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் மொத்தம் 30ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதாக ஒப்புதல் தெரிவித்திருந்தன. ஆனால் இதுவரை 5 ஆயிரம் வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்று மறுசீரமைப்பு அபிவிருத்தி முகாமையின் தலைவர் டிரன் அல்லெஸ் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது டப்ரென் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் ஜே.வி.பி.மற்றும் ஜாதிகஹெல உறுமயவினர் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் இந்த அமைப்பின் செயற்பாடுகளை முடக்கினர். ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பும் முடங்கியது.

அதன் பின்னர் பொறுப்பேற்ற மஹிந்த ராஜபக்ஷ ஆழிப்பேரலை பொதுக்கூட்டமைப்பை நீக்கிவிட்டு, அனைத்து ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்காக ஒருபுதிய அமைப்பை உருவாக்கியுள்ளார்.

ஆழிப்பேரலையினால் மொத்தம் 90ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள் 30ஆயிரம் வீடுகளை கட்டித் தருவதாகக் கூறியிருந்தன. இதர 60ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான முன்னெடுப்புகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

மேலும் இலங்கை கடல் வலயச் சட்ட குழப்பங்களினாலும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகளை கட்டியமுடிக்காமலேயே இலங்கையை விட்டுச் சென்றுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

# செயலமர்வு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையின் கீழ், கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதியிலிருந்து 12ஆம் திகதிவரை யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்படவிருந்த செயலமர்வு இம்மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை யாழ்.பிள்ளையார். இன்விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செயற்திட்ட முகாமையாளர் ரங்க கலன் சூரிய, இலங்கை இதழியல் கல்லூரி பணிப்பாளர் கீத்பேர்னாட் ஆகியோர் ஆரம்ப அமர்வு உரையாற்றவுள்ளனர்.

ஐந்து அமர்வுகளாகத் தொடர்ந்து மூன்று நாட்கள் காலை 9 மணியிலிருந்து மாலை 8.30மணி வரை இச் செயலமர்வு நடைபெறவுள்ளது. (த-51)

# புலி உறுப்பினர்கள் ஐவர் கைது விசாரணை நடந்து வருகிறது

## -ஹக்ரப் ஹொக்லண்ட்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பைச் சேர்ந்த 5பேரை இராணுவத்தினர் கைது செய்துள்ளமை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் தமது உறுப்பினர்கள் 5 பேரை கைது செய்தனர் என்பதற்கான சாட்சியங்கள் தம்மிடம் உள்ளன என்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் கூறியுள்ள நிலையில், இராணுவத்தரப்பு இந்தச் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9

# பொ.ஐ.மு.கூட்டத்தில் துப்பாக்கிச்சூடு

## 4பேர் படுகாயம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பொதுஜன ஐக்கிய முன்னணி நடத்திய பிரச்சாரக் கூட்டம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர்படுகாயமடைந்துள்ளனர்.

ஹிக்கடுவவின் களுபேவில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் மனோஜ் மெண்டிஸ் கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றிக்கொண்டிருந்த போதே வாகனம் ஒன்றிலிருந்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ள து.

இதில் அவர் காயமடையவில்லை அவரது ஆதரவாளர் கள் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் கரப்பிட்டிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தானியங்கித் துப்பாக்கி மூலம் தாக்குதலை நடத்தியதாக ஹிக்கடுவ பொலிஸார் தெரிவித்தனர். மீடியகொட பொலிஸ்நிலைய பிரதேசத்துக்குட்பட்ட கே.பிரேமா ணந்தா (வயது 23), டபிள்யு.எஸ். மஹிந்தரட்ண (வயது 60), சுபசிங்க சுகத்குமார (வயது 21), எஸ்.புத்திக (வயது 21), ஆகியோரே காயமடைந்தவர்கள் என்று பொலிஸார் கூறினார். (க)

# சகல குழந்தைகளுக்கும் பிறப்புச் சான்றிதழ்கள்

(கொழும்பு)

புதிதாகப் பிறக்கும் சகல குழந்தைகளுக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுமென்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

பிறப்புகள் சம்பந்தமான பதிவு 90 சதவீத அதிகரிப்பைக் காண்பித் துள்ளது. இருந்த போதிலும் பெருந்தோட்டப்பகுதி, நகர்ப் புறப் பிரதேசம், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்பவற்றில் பிறப்புப் பதிவுகள் உரியமுறையில் இடம்பெறுவதில்லை.

ஒவ்வொரு குழந்தையையும் பதிவு செய்யும் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததாகும் என்றும் சரத்அமுனுகமகுறிப்பிட்டார். (க-7)

# அடக்குமுறைகளைக் கண்டித்து பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாணவர் சமூகத்தினால் இன்று மேற்கொள்ளப்படவுள்ள பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு அனைத்து கல்விச் சமூகத்தையும் ஆதரவு வழங்கும் படி தெரிவித்து யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மாணவர்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் சுதந்திரமான கல்வி செயற்பாட்டை மேற்கொள்வதைச் சீரழிக்கும் வகையில் சிங்கள இராணுவத்தால் காலங்காலமாக திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறையின் ஓர் அங்கமாகவும் மாணவர்களை சீண்டும் வகையிலும் சமாதானத்தை குழப்பும் நோக்குடனும் சிங்கள கூலிப்படை செயற்பட்டு வருகின்றது. அவ்வகையில்,

* 'மாணவர்கள் அரச அடக்குமுறைக்கு எதிராகவும் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெள அனுமதிக்கக் கூடாது' எனவும் எழுச்சிநிகழ்வுகளை நடாத்த அனுமதிக்கக் கூடாது எனவும் சிங்கள இராணுவ தளபதி ஜி.ஏ. சந்திர சிறி அவர்களால் மிரட்டப்பட்டமை.

* 24.02.2006அன்று பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சென் ஹென்றிக்ஸ் பாடசாலை மாணவர்கள் இராணுவத்தினால் தாக்கப்பட்டமை.

* சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களினதும், ஆசிரியர்களினதும்வீடுகளுக்குச்சென்று மிரட்டியமை.

* உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது பாடசாலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை.

போன்றவற்றுக்கு எதிராக எமது ஒரு மித்த எதிர்ப்பினை வெளிப்படுத்தவும் அரசோ, அரச கூலிப்படையோ எமது உரிமையில் தலையிட முடியாது என்பதை முன்வைத்து இராணுவ தளபதி சந்திர சிறிக்கும் சிங்கள அரசுக்கும் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இன்று திங்கட்கிழமை எமது அனைத்து கல்வி செயற்பாட்டையும் புறக்கணித்து எமது ஒருமித்த எதிர்ப்பை தெரிவிப்போம்.

எமது இந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும்படி அனைத்து கல்வி சமூகத்தையும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (த)

## முதலீட்டுச்சபையின் திட்டத்தில் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

முதலீட்டுச் சபையின் ஒவ்வொரு திட்டத்திலும் குறைந்தது 5 ஆயிரம்பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

முதலீட்டுச் சபை அங்கீகரித்த திட்ட யோசனைகள் குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கென அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ஏனைய முதலீடுகள் காரணமாக உள்ளூர்கைத்தொழில்களை அலட்சியப் படுத்திவிட முடியாது என்றும் தெரிவித்தார்.

இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கு அரச அதிகாரிகள் திறமையுடனும் செயல் புரியவேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (த-9)

## அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலங்களில் மாதாந்தம் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற செயலாளர்களையோ அல்லது ஒரு பிரதிநிதியையோ தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் சகல உள்ளூராட்சி மன்ற செயலாளர்களிற்கும் கடித மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-135)

## 24 மணித்தியால மின் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப்பிரதேசத்துக்கு 24மணி நேர மின் விநியோகம் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான மின் இணைப்புக் கோபுரங்கள்மின் கம்பங்கள் ஆகியன அமைக்கப்பட்டுவருகின்றன. (த-72)

## திடீர் சுகயீனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான் குடி புதிய பாலமுனையில் கட்ட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த 7பேர் திடீர் சுகவீனமடைந்த நிலையில் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

குருநாகல் மாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த இந்த தொழிலாளர்கள் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திடீர் சுகவீன முற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் ஒருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும், ஏனைய 6 பேரும் ஆரையம்பதி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். (த-9)

## பெண்போராளிகளிடையே விளையாட்டு நிகழ்வுகள்





சர்வதேச மகளிர் நாளினை முன்னிட்டு திருகோணமலை மூதூரில் தமிழீழ விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மகளிர் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் போராளிகளுக்கு இடை யிலான விளையாட்டுநிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே போன்ற விளையாட்டுகள் மகளிர் கழகங்களுக்கிடையில் நடைபெற்றன.

போராளிகள் உட்பட 25கழகங்களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தப் போட்டிகளில் ஆரம்ப நிகழ்வுகளில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்சி.எழிலன் கலந்துகொண்டு வீராங்கனைகளை அறிமுகம் செய்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். (த)

## சர்ச்சைக்குரிய படகு தடுத்துவைப்பு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் உள்ள இத்தாலிய தூதரகத்தின் பெயரில் சரக்குகளுடன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் படகு ஒன்றை சுங்கத் துறையினர் தடுத்து வைத்துள்ளனர்.

இந்தப் படகுத் தொடரில் மேலதிக விசாரணைகளை நடத்த கடற்படையின் உதவி கோரப்பட்டுள்ளதாக சுங்கத்துறை தலைமை அதிகாரி யூ.சுமதிபால தெரிவித்துள்ளார்.

திறந்த கொள்கலன் ஒன்றின் மூலம் இது கொண்டு வரப்பட்டதாகவும் இத்தாலிய தூதரகத்துக்காககத்தான் தான் இதனை இறக்குமதிசெய்ததாகவும் உள்ளூர் முகாமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


இந்த கொள்கலன் எதிர்வரும் புதன்கிழமை திறக்கப்படும் என்றும் படகின் தொழில்நுட்ப விடயங்கள் ஆராயப்படும் என்றும் சுமதி பால தெரிவித்தார்.

ஆனால் அத்தகைய சரக்கு எதனையும் தமது தூதரகம் இறக்குமதி செய்யவில்லை என்று இத்தாலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் முகாமையாளரோ தனது வாடிக்கையாளரான இத்தாலிய தூதரகத்துக்காகவே தான் இதை இறக்குமதி செய்துள்ளதாகக் கூறியுள்ளார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (த)

## திருமலையின் க.கா.குழு அதிகாரி கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு





(திருகோணமலை)

ஓய்வுபெற்றுச் செல்லும் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட தலைமைக் கண்காணிப்பு அதிகாரி ஓத்தர் திபிற்றன் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் சம்பூரில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறை செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்து கொண்டார்.

இதன்போது திருமலை மாவட்டத்தின் களநிலவரம் குறித்து ஓத்தரிடம் எடுத்து விளக்கிய கேணல் சொர்ணம் படையினரால் கடத்தப்பட்ட 5 போராளிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு வலியுறுத்தினார்.

நாளை செவ்வாய்க்கிழமை ஓய்வுபெறும் ஓத்தர் திபிற்றனின் இடத்திற்கு ஒவ் ஜோன்சன் நியமிக்கப்படவுள்ளார். (த)

## அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் மனிதநேய பிரச்சினை குறித்து ஆராயப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களின் மனிதநேய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்படுமென்று ஜனாதிபதி ஆலோசகர் நிமால் கப்றால் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் குறித்து கவனம் செலுத்துவதற்கு முன்னர் வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மனிதநேய பிரச்சினைகள் குறித்து ஆராயப்படுமென்று கப்றால் தெரிவித்தார்.

பொருளாதார அனுகூலங்கள் தங்கு தடையின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக கிடைப்பதை உறுதிப்படுத்துவது அவசிய மென்றும் அவர் தெரிவித்தார்.

மீள் குடியேற்றத்தோடு வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

ஏனைய முக்கிய விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு முன்னர் வடக்கு-கிழக்கில் சமூகவாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வது குறித்து பிரதான கவனம் செலுத்தப்படும்.

இதேவேளை சர்வகட்சி மாநாடு இன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது ஜெனீவாவில் கடந்த மாதம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து விளக்கமளிப்பதோடு அடுத்த பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றியும் இன்று சர்வகட்சி மாநாட்டில் ஆராயப்படும்.

பேச்சுவார்த்தைகள் பற்றிய விளக்கத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைப்பார். (த-9)

## இன்று ஒரு தகவல்

# உள்மன ஆற்றல்

ஒரு விஞ்ஞானி ஒரு ஊசியைக் கண்டுபிடிப்பதற்காக நீண்டகாலம் தலையைப் பிய்த்துக்கொண்டிருந்தார். அது எந்த ஊசி தெரியுமா? தையல் மெஷினில் இருக்குமே... அந்த ஊசிதான். அவருக்குப் பிடிபடாமல் இருந்த விடயம் என்ன வென்றால் அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படி கோர்ப்பது? மற்ற ஒருபாகம் மெஷினுக்குள்ளே போய் விடுகிறது... அதனால் அந்த பாகத்தில் சாதாரண ஊசியில் செய்வதுபோல் நூலை நுழைக்க முடியாது! அப்படியே நுழைத்தாலும் தைப்பது எப்படி சாத்தியமாகும்? இதுதான் அவருக்கு இருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார்... தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை... இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார் ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் அவரை ஒரு மலை சாதியினர் பிடித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். கொண்டுபோய் ஒரு இடத்தில் கட்டி வைத்து விடுகிறார்கள். அந்த மலை சாதி மக்களின் அரசன் ஒருவன் வருகிறான்.

அவரைப் பார்த்து ஒரு உத்தரவிடுகிறான். என்ன உத்தரவு தெரியுமா? "பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டுபிடிக்க வேண்டும் அப்படிக் கண்டுபிடிக்காவிட்டால் உன் தலையை வெட்டிவிடுவோம்" இதுதான் அந்த அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழிக்கிறார். இந்த நேரத்தில் அந்த மலை சாதியினர் அவரைச் சுற்றிச் சுற்றிவந்து பயங்கரமாக முழித்துக்கொண்டு நடனம் ஆடுகிறார்கள்.

தன்னைச் சுற்றி சுற்றி ஆடிக்கொண்டுவரும் அவர்களைப் பயத்தோடு இவர் பார்க்கிறார். நேரம் ஆக ஆக தனது இறுதி நேரம் நெருங்குவதை உணர்கிறார். நெக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றி ஆடுபவர்களைக் கவனிக்கிறார். அவர்களின் கைகளில் ஈட்டி மாதிரி ஒரு ஆயுதம் வைத்திருக்கிறார்கள். அந்த ஆயுதத்தை இவரது கண்ணுக்கு நேராகக் கொண்டு வருகிறார்கள். அதை அவர் பார்க்கிறார்.

அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனிக்கிறார். அந்தக் கூரான முனையில் ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. உடனே அவருக்கு பளிச்சென்று ஒரு ஐடியா உதயமானது. "இதைத்தானே இவ்வளவு காலமும் நான் தேடிக்கொண்டிருந்தேன்.

கூரான முனையில் ஒரு சிறு துவாரத்தைப் போட்டு விட்டால் அதன் மூலமாக நூலைச் செலுத்தி மறு முனையை மெஷினில் தைத்து விடலாம். தையல்மெஷின் ஊசி ரெடி" என்று நினைத் தார்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. உடனே தனது தலை மாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத் துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார்.இது எப்படி என்று நினைக்கலாம் நீங்கள். ஆனால் அது சாத்தியம் தான்.

விழித்திருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடை கிடைப்பது உண்டு. உங்களில் பலருக்கு இதுபோன்ற அனுபவம் ஏற்பட்டிருக்கலாம்.

எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தச் செயல் நமது நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயல்திட்டத்தை எந்த அளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்துமுடிக்க முடியும்.

அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவரது எண்ணம் முழுவதையும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினைத்தது அவரது கனவில் உருவாகி அதற்கு செயல் வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டென்று சொல்கிறார்கள். தூக்கத்தை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவது எப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்போது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள்... பயிற்சியும் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைப் பற்றி லேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருவருக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி. அதற்காக மருந்து பாவித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அவரைப் பார்த்துக்கேட்டேன்.

"உங்கள் தூக்கத்தில் நடக்கும் வியாதிக்கு மருந்து சாப்பிட்டீர்களே.. ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா?" என்றேன். "தெரிகிறது" என்றார். "எப்படி?" என்றேன். "முன்பு எல்லாம் தூக்கத்திலிருந்து 10 அடிதூரம்தான் நடப் பேன் இப்போது 40 அடிவரை நடக்கிறேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்


## வடக்கு-கிழக்கு உள்ளிட்ட

# சகல பிரதேச மாணவர்களுக்கும் சம உரிமை வழங்கப்படுமாம்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றி சகல பகுதி மாணவர்களும் சம வாய்ப்பினைப்பெற்று வளமுடன் தமது எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அரசாங்கம் சிறந்த பாடசாலை வசதிகளை பெற்றுக்கொடுக்காமையே சட்ட மீறல்களுக்கும், தவறான செயல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இந்நிலையை மாற்றி எதிர்காலத்தில் கல்வித்துறையில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் ஆகிய பகுதிகளில்வாழும் சகலருக்கும் பிள்ளைகளே சிறந்த சொத்து. அவர்களுக்கான சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்க பெற்றோர்கள் விளைவது நியாயமானது.

அதற்காக அவர்கள் விடும் தவறுகளை சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ்துறையினர் நோக்குவதைப் போலன்றி, நான் வேறு கோணத்தில் பார்க்கிறேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கி புலமைப் பரிசில்களையும் கணனிகளையும் வழங்கி கௌரவித்தது.

இப்புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அரசாங்கவங்கிகள் அபிவிருத்தி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் உபாலி குணரத்தின ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு, கிழக்கு, தெற்கென நாடளாவிய ரீதியில் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பொதுவாக நோக்கும் போது பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை, தளபாடங்களின்மை, விளையாட்டுமைதான மின்மை, உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஆகியன நிலவுகின்றன.

இதனால் நகரப் பாடசாலைகளைப் போன்று கிராமிய பாடசாலைகளையும் முன்னேற்ற சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். புதிய உலகை உருவாக்கும் காலம் கனிந்துள்ளது பிள்ளைகளை சரியாக வளர்த்தால் சிறந்த் நாட்டை கட்டி யெழுப்ப முடியும் என்றார்.

(க-7)

## சந்திரசேகரனுக்கு அமைச்சுப்பதவி

அரசாங்கத்துடன் இணைந்து உள்ளூராட்சித் தேர் தலில்போட்டியிடவுள்ள இ.தொ.கா.வினருக்கும்ம.ம. முன் னணியினருக்கும் மிக விரைவில் அமைச் சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வந்துள் ளது.

இ.தொ.கா.வின் சார்பில் அக்கட்சியின் தலைவர் ஆறு முகன் தொண்டமானுக்கு, ம.ம.முன்னணியின் சார்பில் பெ.சந்திரசேகரனுக்கும் இந்த அமைச் சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக ஆறுமுகன் தொண்டமானுக்கு விமான போக்குவரத்துத்துறை அமைச்சும், சந்திரசேகரனுக்கு பெருந்தோட்டத்துறை அமைச்சும் வழங்கப்படக்கூடுமென எதிர்பாக்கப் படுகிறது. இதற் கான பேச்சுவார்த்தை நடந்து முடிந்துள்ளதாகவும்தெரியவருகிறது.

(சு)
















ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தித்திட்ட பொறியியலாளரால் வழங்கப்பட்ட 9 உழவு இயந்திரங்களை யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் அவ்வவ்மாநகர, நகர, பிரதேசசபைகளிடம்கையளித்தார்.

யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் சபை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட பொறியியலாளர் சர்மா, பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச சபை செயலாளர்பசுபதி,யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, மதுமதி வசந்த குமார் ஆகியோரை படங்களில் காணலாம். (படங்கள்: எஸ்.ரி. ராஜா)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்

## -நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் மக்கள் உள்ளனர். எனினும் சமாதானத்தைஏற்படுத்துவது இலகுவான செயலில்லை என சுகாதார போசாக்குமற்றும் நலன்புரி அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

தமது அரசாங்கம் சமாதானத்தை ஏற்படுத்த புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பதுளையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்காக அரசாங்கம் பல தரப்பினரின் கருத்துக்களைப் பெற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் அரசிற்கும் இடையே முதலில் பூரணமான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். இதனால் இரு தரப்பிற்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அவற்றை சீர்செய்து சமாதானத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக நிமால் சிறிபால டி சில்வா மேலும் குறிப்பிட்டார். (த-5)

# இளம் பராயத்தினரை பீடிக்கும் வைரஸ் காய்ச்சல்

(காரைநகர்)

காரைநகரில் வைரஸ் காய்ச்சல் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது.இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் பராயத்தினர் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் பிரதேச பாடசாலை மாணவர்கள் சிலர் காய்ச்சல் காரணமாகப் பாடசாலையிலிருந்தே வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுச் சென்றனர். இவ்வாறு பல மாணவர் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

இது தொடர்பாக காரைநகர் பிரதேச வைத்தியசாலை வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்ட போது, இக் காய்ச்சலுக்கு வயது வேறுபாடின்றி பலர் சிகிச்சை பெற்று வருவதாகவும், இது சாதாரண வைரஸ் காய்ச்சல் என்பதால் இது தொடர்பாக பாரியளவில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் காய்ச்சல் அறிகுறி கண்ட மாணவர்களை, அந் நோய் முற்றாக குணமடையும் வரைக்கும் பாடசாலைக்கு அனுப்பாது அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக் கொள்வ துடன் தேவையானளவு ஓய்வு எடுப் பதும் முக்கியமானது என்பதுடன் கூடுதலாக நீராகாரம் மட்டுமே உணவாகக் கொண்டு கொதித்தாறிய நீரைப் பருகினால் இலகுவில் குணமடைய முடியும்.

இதனால் இக் காய்ச்சல் பரவுவதையும் தடுக்கவும் முடியும். அத்துடன் பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் இக் காய்ச்சல் பரவுவதனைத் தடுக்க முடியும் எனவும் ஆலோசனை தெரிவித்துள்ளனர். (த-246)

## வடக்கு-கிழக்கு மாகாணத்தில்

# பாடசாலை சமூகத்தினர் மத்தியில் போதைவஸ்து பாவனையை ஒழிக்கும் விழிப்புணர்வு வேலைத்திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலை சமூகத்தினர் மத்தியில் போதைவஸ்துப் பாவனையை முற்றாக ஒழிப்பது தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அலுவலர்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றில் போதைவஸ்துப் பாவனையை தடைசெய்துள்ளமை தொடர்பான தாபன விதிக்கோவையின் சட்டங்கள் மற்றும் கல்வியமைச்சின் சுற்றறிக்கை விடயங்கள் கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புகைத்தல், மது அருந்துதல், தீங்கிழைக்கும் போதைவஸ்துக்களைப் பாவித்தல் என்பன தொடர்பாக மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் 1997 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் பாடசாலை சுற்றாடலில் மதுபானம் அருந்துதல், புகைத்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றை விற்பனை செய்வது முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பாடசாலை வைபவங்களின் போது போதைவஸ்துப் பொருட்கள் மற்றும் சிகரெட்டுக்கள் என்பனவற்றை மாணவர்களைக் கொண்டு தருவிப்பதும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகள் வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலும் கடுமையாக அமுல்படுத்தப்படவிருப்பதாக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (த-9)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் அதிபர் மா.செல்வராசா தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சண்முகசுந்தரமும், சிறப்பு விருந்தினராக வட்டு. மேற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி தே. கலைச்செல்வனும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-9)

## மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி லயன்ஸ் கிளப்பின் ஆதரவில் எதிர்வரும் 12ஆம் திகதி கொடிகாமம் திருநா வுக்கரசு மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-108)

# எரிபொருட்களின் விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை மாற்றியமைக்க நேரிட்டதாக பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தியமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

இதன்பிரகாரம் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 4 ரூபாவினாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 2ரூபாவினாலும் பெரும்பாலும் அதிகரிக்க நேரிடலாம் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 6 மாத காலங்களில் உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்திருக்கின்ற போதிலும், உள்நாட்டில் அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் கொண்டுவர நேரிட்டதாகவும் அது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழு தனது சிபார்சுகளை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் மண்ணெண்ணெயின் விலைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# க.பொ.த.(உ/த) பரீட்சையை பிற்போடுவது குறித்து இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையை சிலவேளைகளில் பிற்போட நேரிடலாம் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையை பிற்போடுமாறு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையை மே மாதம் பிற்பகுதி வரை பிற்போடுமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கோரியுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பரீட்சையை யூன் மாதம் நடுப்பகுதி வரை நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைகள் பிற்போடப்பட்டால் பரீட்சை நிலையங்களாக இயங்கவுள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளில் மாற்றம் செய்யப்படுமென்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக கல்வியமைச்சு அதிகாரிகளுக்கும், பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுக்கிடையில், கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.இக் கூட்டத்தில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தினால் தனது முடிவை அறிவிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் போது விஞ்ஞானப் பாடத்திற்கான விடைத்தாள்கள் மீளாய்வு செய்ய நேரிட்டதினால் மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் இவ் வருடம் உயர் தரப் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உயர்தரப் பரீட்சையை பிற்போட வேண்டியிருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.(த-9)

# தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 15ஆம் திகதி விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் வாக்காளர்களுக்கு விநியோகிக்க தபால் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுமென்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 7 ஆயிரத்து 500 தபால் விநியோகஸ்தர்கள் மூலம் வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப் பட வுள்ளன.

குறைந்தளவில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட வுள்ள பிரதேசங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் அவை விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள தபாலகங்களுக்குச் சென்று தங்கள் அடையாளங்களை உறுதிப்படுத்தி, அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் காலத்தில் அதிகபட்ச பாதுகாப்பை வழங்குமாறும் பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு உட்பட தூரப் பிரதேசங்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு பொது போக்குவரத்துச் சேவைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கமைய வாக்காளர் அட்டைகள் தபாலகங்களுக்கு அனுப்பப்படும் காலத்தில் ரயில் மற்றும் பஸ் சேவைகளை ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பிரிவினரிடம் கோரியிருப்பதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (த-9)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மழை நீரினை சேமித்து வைப்பது தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் கருத்தரங்கு எதிர்வரும் 8ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளினால் விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (த-135)

## புத்தகங்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால் பாடசாலை தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறுவர் சேமிப்பு கணக்கின் மூலம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் 5 இலட்சத்திற்கும் அதிகமான தொகையினை சேமித்துள்ளனர்.

இதன் விளைவாக கல்லூரிக்கு இலங்கை வங்கி 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை வழங்கவுள்ளதாக வங்கி முகாமையாளர் என்.சிவரத்தினம் தெரிவித்துள்ளார். (த-132,133)

# நகல் சட்டமூலம்

(கொழும்பு)

ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளின் போது, எதிர்நோக்கப்படும் சிரமங்களிலிருந்து உள்நாட்டு வர்த்தக சமூகத்தினரும், பாவனையாளர்களும் மீள்வதற்கான இரண்டு நகல் சட்டமூலங்கள் இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என்று வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஜி. வீரசிங்க தெரிவித்தார்.

முக்கியமாக விவசாயம், சிறுகைத் தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த சட்டமூலங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

இறக்குமதி பொருட்களின் விற்பனை காரணமாக பாரபட்சங்களுக்கு உள்ளாகும் உள்ளூர் உற்பத்தியாளர் இந்தச் சட்டமூலங்கள் மூலம் நிவாரணம் பெற வாய்ப்புண்டு என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-7)

# ஊழியர் வேதன உயர்வு

## நாளை முடிவெடுக்கப்படும்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் வேதன உயர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு நாளை முடிவெடுக்கப்படுமென்று நிதியமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக முழு நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென்று நிதியமைச்சின் பிரதியமைச்சர் றஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய சுற்றுநிருபம் திருத்தப்பட்டு புதிய சுற்றுநிருபம் விரைவில் வெளியிட்டு வைக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

ஆகவே தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அவசியம் ஏற்படாது என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

# மனரீதியிலான நோயாளர்கள் சிலர் வைத்திய ஆலோசனை பெறுவதில்லை

(கொழும்பு)

மன ரீதியிலான நோய்களுக்கு சிலர் உரிய வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதில்லை என்று தேசிய கவுன்ஸிலிங் உதவி நிலையம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற மனநோய்களைப் பூரணமாக குணமாக்க முடியாது என்றும், மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் எழுந்துள்ளதாகவும் அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மனநலக் குறைவு இருக்குமானால் அவர்கள் அதனை வெளிப்படுத்துவதில்லை.

எனினும் அவர்கள் மனநோய் வைத்தியரை நாடி அவர்களுக்குரிய பிரச்சினைகளைக் கூறி , அதற்குரிய சிகிச்சையை பெற்றுக் கொள்வது அவசியமென்று மன நல வைத்தியர் தெரிவித்துள்ளார். (த-9)

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவுக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம்திகதி காலை 10.00 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் தலைவர் சோ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதுவருடத்துக்கான நிர்வாகிகள் தெரிவு நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-134)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## ஜோர்ஜ் ஸ்டீபன்சன்



இங்கிலாந்தில் உள்ள நியூ காசில் என்ற ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார் ஜோர்ஜ் ஸ்டீபன்சன். எட்டுப் பேர் கொண்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்ததனால் சிறுவயதிலேயே கூலித் தொழில் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காக முதலில் மாடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டார். பின்பு மாட்டுப் பண்ணையொன்றில் வேலை பார்த்தார்.

அப்போது, தன் வயதினை ஒத்த மாணவர்கள் எல்லாம் பள்ளிக்குச் சென்று படித்து வருவதைக் கண்டு ஏக்கம் கொண்டார். எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்ற ஏக்கத்தினைத் தீர்க்க இரவுப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். படிப்புக்குச் செலுத்தவேண்டிய கட்டணத் தொகைக்காக பகலில் வேலை செய்து பசியைப் போக்கினார். அது மட்டுமின்றி, வேலை இல்லாத நாட்களில் புதிய இயந்திரம் ஒன்றினைக் கண்டு பிடிப்பதில் ஆர்வம் காட்டி வந்தார். இயந்திரத்திற்கு சாமான்கள் வாங்க செருப்பு தைக்கும் தொழிலையும் மேற்கொண்டு வந்தார். தன்னுடைய குறிக்கோளை அடைவதற்காக எந்தத் தொழிலையும் செய்ய தயங்கவே இல்லை.

இயந்திர நுட்பங்களை அறிந்துகொள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

இப்படி கடுமையாக உழைத்து வந்த நாளில் ஒருநாள் நிலக்கரிச் சுரங்கத்தில் இருந்த நீராவி இயந்திரம் ஒன்று பழுதடைந்துவிட்டது. மெக்கானிக்கள் பலர் முயற்சித்தும் இயந்திரத்தை இயக்க முடியவில்லை... இதனைக் கவனித்துக் கொண்டிருந்த ஸ்டீபன்சன்,

''நீங்கள் அனுமதி தந்தால் நான் இந்த இயந்திரத்தை இயக்கிக் காட்டுகிறேன்'' என்று முதலாளியிடம் அனுமதி கேட்டார்.

''முன் பின் பழக்கமில்லாத உன்னால் எப்படி இயக்க முடியும்? இருந்தாலும் நீ ஆர்வமாகக் கேட்பதனால் உனக்கு அனுமதியளிக்கிறேன்'' என்றார் முதலாளி.

ஸ்டீபன்சன் தான் ஏற்கெனவே இயக்கிவந்த இயந்திர நுட்பங்களைப் பயன்படுத்தி சிலமணி நேரத்தில் இயந்திரத்தினை இயக்கிக் காட்டினார். முதலில் இயங்கிய இயக்கத்திற்கு மேலாகப் பன்மடங்கு அதிகமாக அந்த இயந்திரம் வேலை செய்யத் தொடங்கியது. ஆச்சரியமடைந்த முதலாளி ஸ்டீபன்சனைப் பாராட்டி பரிசுத் தொகையினையும் அளித்தார். கிடைத்த தொகையினைக் கொண்டு ரயில் வண்டியை கண்டுபிடித்தார். அதே போன்று ரொக்கெட் என்ற இயந்திரத்தினை தனது மகன் ராபர்ட்டின் உதவியுடன் செய்து முடித்தார்.

கண்டுபிடிப்புத் துறையில் உழைத்து அதிகப் பொருளை ஈட்டினார். தாமும் வாழ்ந்தார், பிறரையும் வாழவைத்தார். தாம் சிறு வயதில் வசதியில்லாத காரணத்தினால் மாடு மேய்த்ததோடு பல தொழில்களையும் செய்தது போல் மற்றவர்களும் செய்யக் கூடாது என்பதற்காக இலவச பள்ளிகளையும், இயந்திரங்களைக் கண்டறியும் பரிசோதனைக் கூடங்களையும் நிறுவினார்.

## கூடா நட்பு

ஒருநாள் பாம்பு ஒன்றைப் பிடித்து தனது பெட்டிக்குள் அடைத்து வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான் பாம்பாட்டி ஒருவன். அப்போது அந்தப் பக்கமாக ஒரு எலி ஓடிச் செல்வதைக் கண்டான். பாம்புக்கு இரை கொடுப்பதற்காக அந்த எலியையும் பிடித்து அதே பெட்டிக்குள் போட்டான். பெட்டிக்குள் இருந்த பாம்பு, எலியைக் கண்டவுடன் அதை விழுங்க ஓடி வந்தது.

அப்போது எலி, ''தயவுசெய்து என்னை அவசரப்பட்டு விழுங்கி விடாதீர்கள். என்னை இப்போது நீங்கள் விழுங்குவதால் உங்கள் பசி வேண்டுமானால் தீர்ந்து போக லாம். ஆனால், உங்கள் சிறையிருப்பு மாறுமா?'' என்னால், உங்களை இந்தப் பெட்டியிலிருந்து விடுவிக்கச் செய்ய முடியும்'' என்று பாம்பைப் பார்த்து சொன்னது.

இதைக் கேட்ட பாம்பு, ''அப்படியாசரி! என்னை நீ விடுவிப்பதாக இருந்தால் உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன்'' என்றது. உடனே எலி, தனது பற்களால் பெட்டியின் மேற்புறத்தில் பாம்பு தப்பித்துப் போகும் அளவுக்கு துவாரத்தை ஏற்படுத்தியது. பாம்பானது எலிக்கு நன்றி கூறிவிட்டு அந்த துவாரத்தின் வழியே தப்பித்து வெளிவந்து விட்டது. பிறகு, எலியும் அவ்வழியே வெளிவந்து தப்பித்துக் கொண்டது.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் அந்த பாம்பானது தனக்கு உதவி செய்த எலியைக் கண்டது. உடனே அது, எலிக்கு 'ஹாய்' சொல்ல, பாம்பு வேகமாக வருவ



தைக் கண்ட எலி பயந்து போய் வேகமாக ஓடிச் சென்று தனது வளைக்குள் பதுங்கிக்கொண்டது.

''என்ன எலியே! என்னைக் கண்டு இப்படி ஓடுகிறாய்! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். உனக்கு 'ஹாய்' சொல்லத் தான் வந்தேன். என்னைக் காப்பாற்றிய உன்னோடு நட்பு வைத்துக் கொள்ள விரும்புகிறேன். விலைமதிக்க முடியாத என் சுதந்திரம் பறிபோக இருந்ததே அதை நீ மீட்டுக் கொடுத்தாயே. அதனால் உன் நட்பு எனக்குத் தேவை!'' என்றது.

இதைக் கேட்ட எலி வளைக்குள் இருந்தவாறு,

''ஏ பாம்பே நீ நினைப்பது தவறு. நீ வேண்டுமானால் நல்லவராக இருக்கலாம். ஆனால், உங்கள் இனத்தவரின் பிறவிக் குணத்தை உங்களால் மாற்ற முடியாது. இதனால் ஏற்படும் ஆபத்து என்னை மட்டும் பாதிப்பதோடு நின்றுவிடாமல் எனது இனத்திற்கே பெரிய பாதிப்பாக அமைந்துவிடும். உங்கள் எது இயல்பான குணத்தை உங்களால் என்றுமே மாற்றிக்கொள்ள முடியாது. எனவே, இந்த கூடா நட்பு வேண்டாம்'' என்று கூறிற்று. இதைக் கேட்ட பாம்பு, எலி கூறியதில் உண்மை இருப்பதை உணர்ந்துகொண்டு தன் வழியே சென்றது.

## நரி!

நரி தான் உண்டதை வாந்தி எடுத்துத்தான் தனது குட்டிகளுக்குக் கொடுக்கும். அப்பொழுதுதான் குட்டிக்கு அந்த உணவு செரிக்கும். மனிதனால் பழக்க முடியாதது நரி ஒன்றைத்



தான். குள்ளநரியின் கர்ப்ப காலம் 52 நாட்கள். ஏழு ஆண்டுகள் வரை குள்ளநரி உயிர் வாழும். நரி மணிக்கு 42 மைல்கள் வேகத்தில் ஓடுகிறது. ஒரு நாளில் நரி 13 மணி நேரம் தூங்கும்.

நரி மிஞ்சிய உணவைப் பூமியில் தோண்டிப் புதைத்து வைக்கும். அப்போது அடையாளத்துக்காக அந்த இடத்தில் சிறுநீர்கழித்து விட்டுப்போகும். நரிக்கு வயிறு நிறைந்துவிட்டால் பெருத்த குரலில் ஊளையிடும்.

## மின்சார மின்னல்

பெஞ்சமின் பிராங்கிளின் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 1752ஆம் ஆண்டு அவர் தன் வீட்டில் தயாரித்த ஒரு பட்டத்தைவிட்டு மின்னல் பற்றி சோதனை செய்து கொண்டிருந்தார். அந்தப் பட்டம் மெலிதான கம்பி நூலில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதைத்



தான் பிராங்கிளின் கையில் பிடித்திருந்தார். அவரது கையில் இருந்த கம்பி நூலின் முனை பட்டுத்துணியால் சுற்றப்பட்டிருந்தது.

அவர் எதிர்பார்த்தது போலவே அப்போது மின்னல் வெட்டியது. பட்டத்தில் பட்ட மின்னல் அந்த மெல்லிய கம்பி வழியாக தீப்பொறி போல் பட்டுச் சிதறியவாறு வேகமாக கீழே இறங்கியது. அதைக் கண்டு திடுக்கிட்ட பிராங்கிளின் அது தன் கையை எட்டும் முன் பட்டத்தைப் போட்டுவிட்டு தாவிக் குதித்து ஓடி உயிர் தப்பிவிட்டார்.

இந்தப் பரிசோதனை ஆய்வு நிகழ்ச்சிதான் மின்னலில் மின்சாரம் இருக்கிறது என்னும் உண்மையை பெஞ்சமின் பிராங்ளின் கண்டறிய பேருதவியாக இருந்தது.

பிராங்கிளின் செய்த இந்தப் பரிசோதனை மிகவும் ஆபத்தானது. ஏனென்றால் பிராங்கிளினுக்குப் பிறகு இதேபோன்று பட்டத்தின் மூலம் மின்னலில் மின்சாரம் இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்ய முயன்ற இரண்டு விஞ்ஞானிகள் மின்னல் மின்சாரத்தால் தாக்கப்பட்டு இறந்து போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுகதைகள்

1.பச்சைக் கதவு வெள்ளை ஜன்னல் உள்ளே கறுப்பு ராஜா அது என்ன?

2.பகலில் வரும் அண்ணனுக்கு பக்கத்துணை யாருமில்லை இரவில் வரும் தங்கைக்கு ஏகப்பட்ட தோழிகள். அவர்கள் யார்?

3.நெருப்பில் வெந்தவன் பசியாற்றுகிறான் அவன் யார்?

4.பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் அது என்ன?

5.சின்னச்சின்ன பெட்டிக்குள்ளே சேதி எல்லாம் கண்ணுக்குள்ளே அது என்ன?

6.சாமரம் கொண்டவள் சக்கரம் போலிருப்பாள் சூரியனைக் கண்டதும் புன்னகையாய் மலர்வாள் அவள் யார்?

7.சிறு சிறு கதவுகள். திறந்து மூடுகையில் ஒலி வராத கதவுகள் அது என்ன?

8.சருகுசேலைக்காரி சமையலுக்கு வேண்டியவள் அவள் யார்?

9.சிவப்பன் குளித்தால் கறுப்பன் அவன் யார்?

10.தாய் தரையில் மகள் மகுடத்தில் அது என்ன?

### விடைகள்

விடுகதைகள்

1.சீத்தாப்பழம் 2.சூரியன்-சந்திரன்
3.சோறு 4.வெண்டைக்காய் 5.ரீ.வி
6.தாமரை 7. கண் இமைகள்
8.வெங்காயம் 9.நெருப்பு 10.முத்து

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

14

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

4.ஒவ்வொரு அரச தரப்பினரும், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு அறிவித்துவிட்டுத் தம் பிரகடனத்தைப் பலப்படுத்தலாம். அவர் அதை எல்லா அரசதரப்பினருக்கும் அறிவிப்பார். அவ்வறிவிப்பு, செயலாளர் நாயகத்துக்குக் கிடைக்கும் திகதி முதல் செயல்முறைக்கு வரும்.

5.இவ்வுறுப்புரையின் 1ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச வயதெல்லையை உயர்த்தும் தேவை, அரச தரப்பினரின் ஆயுதப் படைகளினால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 28, 29ஆவது உறுப்புரைகளுக்கிணங்க நடத்தப்படும் அல்லது அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகளுக்குப் பொருந்தாது.

களை எடுத்தல்வேண்டும்.

2. இப்பூர்வாங்க ஆவணத்தின் கோட்பாடுகளையும், ஏற்பாடுகளையும் வளர்ந்தோர் மற்றும் பிள்ளைகள் மத்தியில் பரப்புவதற்கும், தெரியச் செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரச தரப்பினர் எடுக்கவேண்டும்.

3. தமது நியாயாதிக்க எல்லைக்குள் தற்போதைய பூர்வாங்க ஆவணத்துக்கு மாறாகப் படையில் சேர்க்கப்படுபவர்களையும் அல்லது சண்டையில் ஈடுபடுத்தப்படுபவர்களையும் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு அரச தரப்பினர் தம்மாலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அவ்வாறு விடுவிக்கப்படுவோரின்

பித்தல் வேண்டும். அவ்வறிக்கையில் ஆட்சேர்ப்பு, பங்குபற்றல் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களும் கொடுக்கப்படல் வேண்டும்.

2. விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு அரச தரப்பும் சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழுவுக்கு சமவாயத்தின் 44ஆம் உறுப்புரைக்கமைய பூர்வாங்க ஆவணத்தைச் செயற்படுத்தியது சம்பந்தமான வேறு தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். ஆவணத்தின் ஏனைய அரச தரப்பினர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. தற்போதைய பூர்வாங்க ஆவணத்தை செயற்படுத்துவது சம்பந்தமான வேறு தகவல்களை சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழு அரசதரப்பினரிடம் கோரலாம்.

2. இப்பூர்வாங்க ஆவணம் ஒப்புதலைப் பெறவிருக்கிறது. எந்த அரசும் அதில் சேரலாம். ஒப்புதல் அல்லது சேருதல் தொடர்பான சாசனங்கள் ஐக்கிய நாடு



களின் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

3.செயலாளர் நாயகம், சமவாயத்தினதும் பூர்வாங்க ஆவணத்தினதும் வைப்பாளர் என்ற காரணத்தினால் 3ஆம் உறுப்புரைக்கு அமைய சமவாயத்தின் எல்லா அரச தரப்பினருக்கும் சமவாயத்

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்



**உறுப்புரை 4**

1.அரசு ஒன்றின் ஆயுதப் படைகளிலிருந்து வேறுபட்ட அயுதக் குழுக்கள் எச்சந்தர்ப்பத்திலும் 18 வயதுக்குக் குறைந்தோரைச் சேர்த்தலாகாது. சண்டையில் (போரில்) ஈடுபடுத்தவும் கூடாது.

2.அத்தகைய ஆட்சேர்ப்பையும் பயன்படுத்தலையும் தடுப்பதற்குத் தங்களால் சாத்தியமான அத்தகைய செயல்முறைகளைத் தடைசெய்யும், குற்றமாக்கும் சட்ட நடவடிக்கைகள் உட்பட எல்லா நடவடிக்கைகளையும் அரச தரப்பினர் எடுத்தல்வேண்டும்.

3.இந்த உறுப்புரையின் பிரயோகம் ஆயுத மோதலில் சம்பந்தப்பட்டுள்ள எப்பகுதியினரினதும் சட்ட அந்தஸ்தைப் பாதிக்காது.

**உறுப்புரை 5**

இப்பூர்வாங்க ஆவணத்திலுள்ள எதுவும் அரசதரப்பு ஒன்றின் சட்ட ஏற்பாடுகளையோ, சிறுவர் உரிமைகளை அடைவதற்கு வழிகோலும் சர்வதேச சாசனங்களையோ சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையோ பாதிப்பதாகக் கொள்ளலாகாது.

**உறுப்புரை 6**

1.ஒவ்வொரு அரச தரப்பினரும் இப்பூர்வாங்க ஆவணத்தின் ஏற்பாடுகளைத் தம் நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பயனளிக்கத்தக்க வகையில் செயற்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிர்வாக, ஏனைய நடவடிக்கை

உடல், உள தேறுதலுக்கும் சமூகத்துடன் மீண்டும் இணைவதற்கும் பொருத்தமான உதவிகளையும் அளித்தல் வேண்டும்.

**உறுப்புரை 7**

1. இப்பூர்வாங்க ஆவணத்தைச் செயற்படுத்துவதற்கும் அதற்கு முரணான செயல்களைத் தடுப்பதற்கும் அச்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்குப் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைப்பதற்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, நிதியுதவி உட்பட எல்லா ஒத்துழைப்புகளையும் அரச தரப்பினர் நல்கவேண்டும். அத்தகைய உதவியும் ஒத்துழைப்பும் சம்பந்தப்பட்ட எல்லா அரச தரப்பினரையும், சர்வதேச நிறுவனங்களையும் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படவேண்டும்.

2. அத்தகைய ஒத்துழைப்பை நல்கக்கூடிய நிலையிலுள்ள அரசதரப்பினர் அவ்வுதவியை ஏற்கனவேயுள்ள பலதரப்பு, இருதரப்புத் திட்டங்கள் மூலமோ அல்லது ஏனைய திட்டங்கள் மூலமோ அல்லது பொதுச் சபையின் விதிகளுக்கமைய சுயவிருப்பில் நிறுவப்பட நிதியத்தினூடாகவோ வழங்கல் வேண்டும்.

**உறுப்புரை 8**


1.ஒவ்வொரு அரசதரப்பும், அந்த அரச தரப்பைப் பொறுத்தவரை இப்பூர்வாங்க ஆவணம் செயல்முறைக்கு வந்த திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் ஆவணத்தைச் செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி, சிறுவர் உரிமைகள் பற்றிய செயற்குழுவுக்கு விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்

**உறுப்புரை 9**

1. சமவாயத்தில் சேர்ந்த அல்லது ஒப்பமிட்ட எந்த அரசும் இப்பூர்வாங்க ஆவணத்தில் ஒப்பமிடலாம்.

திற்கு ஒப்பமிட்டு ஒப்புதலளித்த எல்லா அரசுகளுக்கும் ஒவ்வொரு பிரகடனத்தையும் அறிவிக்க வேண்டும்.

(தொடரும்...)



வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில்....

*(படங்கள்: விஷ்ணு, சிவா)*

அன்பார்ந்த மாணவர்களே!

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

### தேர்தல் நடவடிக்கைகளின் போது

# உள்ளூராட்சி மன்றங்களின் சொத்துக்களை பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை !

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் பணம் மற்றும் சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினால் அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் உத்தர விட்டுள்ளார்.

இது தொடர்பாக அனைத்து மாகாண சபை செயலாளர்களுக்கும் அறிக்கை ஒன்றை அவர் அனுப்பியுள்ளார்.

பல உள்ளூராட்சி சபைகள் அரச சொத்துக்களை தேர்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதாக இதுவரை 200 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் அந்த செயற்பாடுகளை நிறுத்துவதற்கென இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் தங்களின் சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தினால் அது தொடர்பில் உடனடியாக தெரிவிக்குமாறு உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் அனைத்து மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளு மன்ற , மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்ததற்கமைய அவர்கள் இந்த முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

சில உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நெருக்குகையில் தங்களின் நிறுவனங்களினூடாக புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டுதல், விற்பனை செய்தல், குத்தகைக்குவிடல் ஆகிய நடவடிக்கைகளை தங்களின் சொந்த தேவைகளுக்காக மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் வாகனங்களை அலங்கரித்தல், சுவரொட்டிகளை ஒட்டுதல் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி சபைகளின் வாகனங்களைப் பயன்படுத்தப்படுவதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு சென்றதாகவும், விரைவில் இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (க)

## விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் கையளிப்பு

(நல்லூர்)

தாவடி தெற்கு ஸ்ரீகாளி அம்பாள் சன சமூக நிலைய பாலர் பாடசாலைக்கு லீட்ஸ் நிறுவனத்தினர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்கியுள்ளதாக நிலையச் செயலாளர் மு.பொன்னுத்துரை தெரிவித்துள்ளார். (க-134)

## வீதி திருத்தப்படவில்லை

(நல்லூர்)

கோப்பாய் பிரதேசசபைப் பிரிவிலுள்ள நாயன்மார்க்கட்டு பாரதி ஒழுங்கையையும் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியையும் இணைக்கும் நாயன்மார்கட்டு வயல்வெளி ஒழுங்கை கடந்த முப்பது வருடங்களாக திருத்தப்படாத நிலையில் உள்ளதால் இவ் ஒழுங்கையால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒழுங்கையின் மத்தியில் பாரிய குழி ஒன்று இருப்பதால் வாகனங்களில் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான யாழ்.மாவட்ட அரச அதிபர் கோப்பாய் பிரதேச சபையின் செயலாளர் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வடகிழக்கு மாகாண ஆணையாளர் ஆகியோருக்கு கடந்த வருட முற்பகுதியில் நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையம் மகஜர்கள் அனுப்பியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த ஒழுங்கையை திருத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காதையிட்டு அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (க-134)

# தேசிய திட்டமிடலுக்கான அமைப்பு விடுதலைப்புலிகளால் உருவாக்கம்

தேசிய திட்டமிடலுக்கான அமைப்பு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் அபிவிருத்தி இலக்குகளை இனம்கண்டு இந்த அமைப்பு அதன் துணை அமைப்புக்களுடன் இணைந்து செயற்படவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முற்பகல் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான ஆய்வுப்பட்டறையின் பின்பு இந்த அமைப்பின் செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மாவட்ட மேம்பாட்டு பேரவை ஆலோசனைக்குழு, பிரதேச மேம்பாட்டு பேரவை, ஊரக மேம்பாட்டு பேரவை என பல்வேறு கட்டமைப்புடன் இந்த அமைப்பு செயற்படவுள்ளது. மக்களுடனான நல்லுறவைப் பேணி அடிமட்ட மக்களின் தேவைகளை பகுத்தாய்வு செய்து தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு பல திட்டங்களை இந்த அமைப்பு செயற்படுத்தவுள்ளது.

தமது எண்ணங்களுக்கு ஏற்றவாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படுத்தும் திட்டங்களினால் தேவைகள் சரியான இடத்துக்கு செல்லாமை, மக்களின் மனதில் பல்வேறு கருத்துருவாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் இதனை ஒழுங்குபடுத்தி இந்த அமைப்பினூடாக இனிவரும் காலங்களில் திட்டங்கள் செம்மையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தினர் தெரிவித்தனர். (க)

# பட்ட சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து தமது பட்டச் சான்றிதழ்களை பெறத்தவறிய யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவன பட்டதாரிகள் தமது பட்டச் சான்றிதழ்களை யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

பட்டச்சான்றிதழ்கள் பெறத் தகுதியுடைய மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)

எஸ்.பிரேம்குமார், எஸ்.மகாலிங்கம், எஸ்.பிரேம்குமார், என்.சிறிரஞ்சன், பி.பெருமாள், பி.குமாரசுவாமி, கே.அமுதன்.

தேசிய ஆங்கில டிப்போளமா (NDE)

ஜே.துரைராசசிங்கம், எஸ்.பாலசுப்பிரமணியம், ஆர். தியாகராசா, எல்.கண்ணன்.

தேசிய வியாபார கணக்கியல் டிப்ளோமா (NDBF)

எஸ்.கோமலதா.

உயர்தேசிய வர்தக டிப்ளோமா (HNDC)

எஸ்.சிவகரநாதன்.

தேசிய வியாபார டிப்ளோமா (NDBS)

எஸ்.தியாகராசா. (க)

# வரி மதிப்பீட்டாளர்கள், வரி உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரி உத்தியோகத்தர் பதவிகளுக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்போவதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட விண்ணப்பதாரிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலளார் கலாநிதி பி.பீ.ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு இரண்டு வெவ்வேறான திறந்த போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தாம் பணிபுரியும் திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் ஏனையவர்கள் நேரடியாகவும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. (க-9)

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-108)

# தேர்தல் சட்டங்களை மீறுவோர் குறித்து பொலிஸ் நிலையங்கள் கவனம் செலுத்துவதில்லை

தேர்தல் சட்டங்களை மீறி அமைக்கப்படும் பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் போன்ற பிரசார விளம்பரங்களை அகற்றும் விடயத்தில் சில பொலிஸ் நிலையங்கள் அக்கறை செலுத்துவதில்லை என்று தேர்தல் செயலகத்தின் பொலிஸ் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பான பல முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்தது கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் செயலகத்தின் பொலிஸ் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களை மீறி தேர்தல் பிரசார விளம்பரங்கள் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதைத் தடுப்பதற்கு சில பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமை குறித்து பொது மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அவ்வாறு தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறும் பொலிஸ் அதிகாரிகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசார விளம்பரங்களை அகற்றுவதற்கென்று ஆயிரத்து 500 தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் மூவர் வீதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தேர்தல் பிரசார விளம்பரங்களை அகற்றுவதற்கு பொலிஸ் அதிகாரிகள் அக்கறை செலுத்தத் தவறினால் அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும்பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (க-9)

## மத்தியஸ்த சபைகள் அமைப்பு!

(சாவகச்சேரி)

பிரதேச செயலகங்கள் தோறும் மத்தியஸ்த சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களில் மத்தியஸ்த சபைகள் அமைக்கப்படவுள்ளன.

இம் மத்தியஸ்த சபைகள் மூலம் சிறு சிறு பிணக்குகள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

நீதியமைச்சின் கீழேயே இம் மத்தியஸ்த சபைகள் செயற்படுகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தில் இந்நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக ப.சனார்த்தனன் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். (க-108)

### எண்ணெய் படிமங்களை கண்டறிய வருமாறு

# இலங்கை விடுத்த அழைப்பை ஈரான் அரசு நிராகரித்தது

இலங்கையின் கடலோரப் பிரதேசங்களில் காணப்படும் எண்ணெயப படிமங்களை கண்டுபிடிப்பதற்கு வருமாறு ஈரானுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கையின் பெற்றோலியத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கருத்துத் தெரிவிக்கையில், மன்னார் மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் எண்ணெய் வளம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை பகுதியிலும் எண்ணெய் வளம் கண்டிப்பாக இருக்கும் என பலர் கூறுகின்றனர்.

சவூதி அரேபியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் எண்ணெய் படுகைகள் இருப்பது முக்கியமான விடயமாகும்.

இருப்பினும் உள்ளூராட்சித் தேர்தலில் இது பிரதான விடயமாக முன்வைக்கப்படமாட்டாது. எண்ணெய் வள நாடுகள் பல இருந்தாலும் இலங்கையே எண்ணெய் அகழாய்வு மற்றும் சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்வதால் இலங்கைக்கே அதிக இலாபம் ஏற்படும் என்றார். (க)

# சர்வதேச ஊடகவியலாளர் மாநாடு

(கொழும்பு)

சர்வதேச ஊடக நிறுவனங்கள் கலந்து கொள்ளும் ஊடகவியலாளர் மாநாடொன்று அடுத்த சில மாதங்களுக்குள் இலங்கையில் நடைபெறவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலக ஊடக சுதந்திர தினம் தொடர்பான விசேட நிகழ்ச்சியொன்றும் இந்த வருடம் மே மாதம் கொழும்பில் யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவியோடு நடத்தப்பட இருக்கின்றது என்று கூறினார்.

இலங்கையில் பொதுவான ஊடக கலாசாரத்தை உருவாக்குவது முக்கியமாகி விட்டது என்று தெரிவித்த அவர் திட்மிடப்பட்ட விசேட நிகழ்ச்சி ஊடகவியலாளர்களின் திறமையையும், அனுபவத்தையும் மேம்படுத்துவதற்கு உதவும் என்றும் குறிப்பிட்டார். (க-7)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

## மீள்பார்வை 67


இந்திராகாந்தியுடன்....

இந்திராகாந்தி அவர்கள் என்னைக் கூப்பிட்டு எம்.பி. ஆக்கினார்கள் எனக்குப் பிறகு அந்த சீட் சித்தார் மேதை பண்டிட் ரவிசங்கர் அவர்களுக்குத் தரப்பட்டது.

டி.எஸ்.என்: நீங்கள் ராஜ்ய சபாவில் எம்.பியாக இருந்தபோது தமிழ் நாட்டிற்கு என்ன செய்ய முடிந்தது?

சிவாஜி: என்ன செய்ய முடிந்தது! நாம் எம்.பியாக இருக்கிறோம் என்று நாடாளுமன்றத்தில் விரும்பியதைப் பேசினால் வம்பு வந்துவிடுமல்லவா? கலையுலகத்தில் ஏதாவது பிரச்சினை என்றால் டெல்லியில் சம்பந்தப்பட்டவர்களைப் பார்த்து ஆக வேண்டியதைசெய்தேன்.

ராஜ்ய சபா கூட்டங்களில் கலந்து கொண்டேன் . சமயம் கிடைத்தபோதுதெல்லாம் காமராஜர் கொள்கைகளை நினைவுபடுத்தி அதன்படிச் செயலாற்ற ஒரு தூண்டு கோலாக இருந்தேன் இதைவிட வேறு என்ன செய்யவேண்டும்.


'வீரபாண்டியன்'படத்தில் விஜயகாந்துடன் (1987)

கலைஞன் என்ற தகுதியில் எனக் குத் தரப்பட்ட அந்த பதவியில் என்ன சாதித் தேனோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அந்தப் பதவியை நிச்சயமாக துஷ்பி யோகம் செய்ய வில்லை என்பதை மட்டும் உறுதியா கக் கூறிகிறேன்.

### *உயிர் காப்பான் தோழன்*

டி.எஸ்.என்: இந்திராகாந்தி யுடன் தாங் கள் கட்சியிலிருந்து காலத் தில் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச் சிகள் அல்லது அனுபவங்களைப் பற்றிக் கூற முடியுமா?

சிவாஜி: அநேகம் பேருக்குத் தெரியாத முக்கியமான ஒரு நிகழச்சிய உண்டு. இந்திராகாந்தி பதவியை விட்டு விலகியவுடன் அவர்கள் ஒரு முறை மதுரைக்கு வந்தார்கள். நான் அப் பொழுது அரசியலில் எந்தப் பொறுப்பும் வகிக் கவில்லை. வெறும் நடிகன்தான் .இந்தி ராகாந்தி அவர்களைக் கூட்டத்தில் ஆள் வைத்து அடித்துக் கொல்வதற்காக அப்போது முயற்சி செய் தார்கள். இந்த நாட்டினுடைய தலைவியை ஒழிக்க என்னென்ன முயற்சிகள் நடத்தன என்று நான் விரிவாக இங்கே கூற விரும்பவில்லை.

இவ்வளவுதான் என்னால் கூறமுடியும். இந்திராகாந்தி அவர்கள் மதுரையிலிருந்து ரயிலில் சென்னை வந்தார்கள் அப்போது அவர்கள் வந்த ரயில் பெட்டியைக் கல்லால் அடித்திருக் கிறார்கள் எக்மோர் ஸ்டேஷனில் நான் அவரை வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறேன் . இந்திரா காந்தி அமையார் மட்டும்தான் வந்து இறங்குகிறார்கள் முக்கியஸ்தர்கள் யாரும் கூட வரவில்லை.

இப்போது இருக்கிற அரசியல்வாதிகளில் ஒரு சிலர் மட்டும் அங்கே இங்கே நின்று கொண் டிருந்தார்கள். அந்தம்மா மட்டும் ரயிலில் வந்து இறங்கினார்கள். கல்லால் அடித்த தில் பலர் பயந்து ஓடிவிட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் காப் பாற்றி வெளியில் கொண்டு வரவேண்டும் உயிர் காப்பான் தோழன் என்று தூக்குத் தூக்கி நாடகத்தில் சொல்வோம் இங்கே உயிர் காப் பான் தொண்டன் என்பதை நிரூபிக்க எண் ணினேன் உடனே நான் கையிலிருந்த துப் பாக்கியை எடுத்துத் தூக்கிப் பிடித்துக் கொண் டேன் அது தப்போ சரியோ எனக்குத் தெரி யாது என் கடமை ஒன்றுதான். எனக்குப் பெரி தாகத் தெரிந்தது. என் உயிரைப் பற்றிக்கூட நான் அப்போது கவலைப்படவில்லை.


'புதிய வானம்' படத்தில் சத்தியராஜுடன் (1988)

என் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அம்மையார் அருகில் சென்று பாதுகாப்பாக அவர் கள் கையைப் பிடித்துக்கொண்டேன் யாராவது அருகில் வந்தால் சுட்டு விடுவேன் என்று துப்பாக்கியை நீட்டினேன். இந்திராகாந்தி அம்மையாரை நேராகக் கூட்டிக்கொண்டு போய் எனது காரில் உட்கார வைத்தேன் நம்பிக்கையான ஒரு அரசியல்வாதி இருந்தார். அவரையும் காரில் ஏற்றிக்கொண்டேன். காரில் உட்கார வைத் தேன் நம்பிக்கையான ஒரு அரசியல்வாதி இருந் தார். அவரையும் காரில் ஏற்றிக் கொண்டு டேன் நான் காரின் முன் சீட்டில் துப்பாக்கியுடன் உட் கார்ந்துகொண்டு வண்டியை ஓட்டச் சொன் னேன் வழியில் இந்திராகாந்தி அம்மையாரை கல்லால் அடிப்பதற்காக சாலையில் ஆங் காங்கே ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது.


'அன்புள்ள அப்பா' படத்தில் ரஹ்மான் நதியாவுடன் (1987)

அடையாரில் மல்லிகை என்றொரு வீடு உள் ளது நான் அந்த அம்மையாரைப் பாதுகாப் பாக என் காரில் கூட்டி வந்து அந்த வீட்டில் விட் டேன். அப்போது எனக்கு ஒரு பெரிய பொறுப்பை நிறைவேற்றிய மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே பத்திரிகையாளர்கள் சிலரைக் கூப்பிட்டேன். அம்மையாருக்கு அடி பட்டிருந்தால் இரத்தக் கறை படிந்த புடவையைக் காண்பித்தார்கள் நடந்ததையும் விவரித்தார்கள். மறு நாள் பத் திரிகைகள் சிலவற்றில் இந்தச் செய்தி வந்தது. நேரு குடும்பம் என்றால் எனக்கு ஒரு பக்தி காமராஜருக்குப் பிறகு நான் அவர் விட்டுச் சென்ற பணிகளை செய்கிறேன் என்று கூறி னார் கள் அல்லவா? அதை எப்படி மறக்க முடியும் ஆகையால் காமராஜரை அந்தம்மா உருவத் தில் பார்த்தேன். நான் ஒருவனாகப் பாதுகாப்பு கொடுத்து அவர்கள் டில்லி செல்ல வழி செய்தேன். நமது தமிழ் நாட்டில் எது வேண்டுமானாலும் நடக்கும். ஏன் நடந்தது? எதற்காக? எப் போது? என்று சொல்லவே முடியாது அதனால்தான் தமிழன் என்றொரு இனமுண்டு. அவர்க்கு தனியே ஒரு குணமுண்டு என்று நாமக்கல் கவிஞர் சொன்னாரோ என்னவோ!. (தொடரும்)

# தவக்கால சிந்தனை

"ஆண்டவரே உமது வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியை கொடுக்கின்றன"


1946 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10, கல்கத்தாவில் இருந்து டார்ஜிலிங் செல்லும் புகைவண்டி பயணம் எரியும் முட்புதராக மாறியது சகோதரி ஆக்னசுக்கு! 'லொரெட்டோ துறவற இல்லத்தை விட்டுவிடு, வீதிக்கு வா, சேரியின் குடிசைகளில் தெருவோரங் களிலும் நான் முடங்கிக்கிடக்கிறேன் என்னை அள்ளி அரவணைத்து அன்பு செய்யவா' இந்த அழைப்பிற்கு பதில் சொன்ன ஆக்னஸ் அன்னை திரேசா ஆகி நடமாடும் புனிதை ஆகி உலகின் இதயத்தை ஆக்கிரமித்துக் கொண் டது வரலாறு! இந்த மாபெரும் வரலாற்றுக்கு பின்புலமாக, தூண்டுதலாக அமைந்தது. இன்றைய இறைவாக்கு தானே. என்னை அன்பு செய்வது உன் வாழ்வென்று உணர்ந்தால் ஏழைகளிலும், சின்னஞ்சிறுவரிடம் என்னை கண்டுபிடி அவர்களுக்கு செய்வது சந்தேகத்திற்கு இடமின்றி எனக்கு செய்வதே இந்த உறுதிப்பாடுதான் திரேசாவை பேறு பெற்ற திரேசாவாக உயர்த்தியது..

காவலன்










நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலையின் 4ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.க. கணேசலிங்கம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முத லாவது படத்திலும், ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கண்ணன் நட னம், காவடி ஆட்டம் பேச்சுஆகிய நிகழ்வுகள் முறையே 2ஆம் 3ஆம் 4ஆம் படங்களிலும், ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சைவப்புலவர் சிறுவை கிழார் செல்லத்துரை மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை 5 ஆவது படத்திலும் காணலாம்.

## ரோகித போகல்லாகமவின் செயற்பாடு குறித்து விசாரணை நடத்துமாறு மஹிந்த உத்தரவு

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்களில் கலந்து கொண்ட அமைச்சர் ரோகித போகல்லாகமவின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜெனீவாப் பேச்சுக்களில் பங்கேற்ற அரசாங்க குழுவினருக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நோர்வே அரசாங்கம் செய்திருந்தது. ஆகையால் அமைச்சர்கள் தங்களது மனைவி மற்றும் உறவினர்களை அழைத்துச் செல்ல வேண்டாம் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் அமைச்சர் ரோகித போகல்லாகம இதை நிராகரித்து ஜெனீவா ஹில்ட்டன் பகுதியில் சொகுசு விடுதியில் தனது மனைவி மற்றும் 2 மகன்களுடன் தங்கியிருந்துள்ளார். அதேபோல் ஜெனீவாப் பேச்சுக்களின் போது ஜெனீவாவில் உள்ள இலங்கை தூதுவருடன் சிறிலங்கா அரசாங்கக் குழு நடத்திய பேச்சுக்களுக்கும் தனது மகன்களில் ஒருவரை ரோகித போகல்லாகம அழைத்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவிடம் அரசாங்கக் குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா முறைப்பாடுசெய்திருக்கிறார். அவரது மகனைத் தவிர்த்துவிட்டுப் பேச்சுக்களுக்குச் செல்லுமாறு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மூலமாகவும் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் தன் மகனுக்கு அரசியல் கற்றுத் தருவதற்காக அவரை உடன் அழைத்துச் செல்வதாகவும் அவர் தன் உடனிருந்து கற்றுக் கொள்வார் என்றும் ரோகித போகல்லாகம மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் தான் பிறப்பித்த உத்தரவுகளை மீறிச் செயற்பட்டமைக்காக ரோகித போகல்லாகம மீது விசாரணை நடத்த மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

கடந்த டிசம்பரில் மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பயணம் மேற்கொண்டபோது அரசாங்கத் தரப்பினர் ஏற்பாடு செய்த விடுதியில் தங்காமல் தனது மகன் மற்றும் மனைவியுடன் ரோகித போகல்லாகம சொகுசு விடுதியில் தங்கியிருந்தார். அவரது தங்குமிடச் செலவுகள் தனியார் ஒருவர் ஏற்றுக் கொண்டிருந்தார். அப்போதும் ரோகித போகல்லாகமவின் செயற்பாடு குறித்து சர்ச்சை எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## பதிவு செய்யப்படாத தண்ணீர்— போத்தல்கள் விற்பனைக்குத் தடை

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தண்ணீர்ப் போத்தல்களின் விற்பனை தடை செய்யப்படவுள்ளது.

இந்த வருடம் மே மாதம் தொடக்கம் தண்ணீர்ப் போத்தல்களை பதிவு செய்யாமல் விற்பனை செய்ய முடியாது என்று உரிமைக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனவே பதிவு செய்யப்படாமல் தண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது சுமார் 300 நிறுவனங்கள் தண்ணீர்ப் போத்தல்களை சந்தைக்கு விநியோகித்து வருகின்றன.

எனினும் அனேகமான தண்ணீர்ப் போத்தல்கள் தரக் கட்டுப்பாட்டுப் பணியகத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படாதவை ஆகும்.

தண்ணீர்ப் போத்தல்களை விநியோகிப்போர் குறித்து விழிப்புணர்வொன்றை ஏற்படுத்துவதற்காக இந்த மாதம் முடிவில் இது பற்றிய கருத்தரங்கொன்றை நடத்தவிருப்பதாகவும் பிரதான உரிமைக் கட்டுப் பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். (த-9)

## மாத இறுதியில் மஹிந்த பாகிஸ்தானுக்கு விஜயம்

(கொழும்பு)

இந்த மாத இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானுக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயம் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகுமென்று இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலய பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது இலங்கை அரசாங்கம் உல்லாச பயணத்துறை, கலாசார விவகாரம், புகையிரதம் உட்பட பல ஒப்பந்தங்களில் பாகிஸ்தானுடன் கைச்சாத்திடவிருப்பதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு சம்பந்தமாக பாகிஸ்தானுடன் இலங்கை அரசு ஒப்பந்தம் செய்யவிருக்கின்றதா? எனக் கேட்டதற்கு பேச்சாளர் பதிலளிக்க மறுத்துவிட்டார். (த-9)

## சமுர்த்தி குடும்பங்கள் மத்தியில் கறவைப் பசுக்கள் வழங்கப்படவுள்ளன

(கொழும்பு)

சமுர்த்தி அதிகார சபை- சமுர்த்திக் குடும்பங்களுக்கு கறவைப் பசுக்களை வழங்க திட்டமிட்டுள்ளது.

சமுர்த்திக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும். சமுர்த்திக் குடும்பங்கள் மத்தியில் 10 ஆயிரம் கறவைப் பசுக்கள் விநியோகிக்கப்படவிருக்கின்றன என்று அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சமுர்த்தி வங்கிச் சங்கமும் அதன் கீழ்வரும் குடும்பங்களில் 10 குடும்பங்களை இதற்காகத் தெரிவுசெய்திருக்கின்றது.

கடந்த வருடம் 8 பிரதேச செயலர் பிரிவுகளில் 137 குடும்பங்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (த-9)

## உள்ளூராட்சித் தேர்தலின் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் மாற்றம்?

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த அக்கட்சியின் அமைச்சர்கள் சிலர் தயாராகி வருகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்துடன் தற்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் பெயரை முன்மொழிய இந்த அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதுதொடர்பாக கடந்த சில நாட்களாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

தனது எண்ணத்திற்கேற்ப கட்சியின் நடவடிக்கைகளை சந்திரிகா மேற்கொள்வது மஹிந்தவின் செயற்பாடுகளுக்கு தடங்கலாக அமைவதாக அந்த அமைச்சர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (த)

## புலிகளுக்கும் விமானம் அளித்தது செக் அரசாங்கம் அல்லவாம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு இரு சிறிய இலகு ரக விமானங்களை விற்பனை செய்தது வேறொரு நாட்டின் நிறுவனம் என்று செக் அரசாங்கம் அறிவித்துள்ளதாக சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கைத் தூதுவர் சரளா பெர்னான்டோ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இத்தகவலை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இரு இலகு ரக விமானங்கள் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்தமை சம்பந்தமாக செக் பாதுகாப்பு அமைச்சு விரிவான விசாரணைகளை தொடங்கியிருப்பதாகவும் அந்த விமானத் தயாரிப்பு நிறுவனத்திடம் விசாரணை நடத்தியிருப்பதாகவும் சரளா பெர்னாண்டோ கூறியுள்ளார். செக் அரசாங்கம் தெரிவித்த தகவல்களை இலங்கைத் தூதுவர், ஜெனீவாவில் இலங்கை அரச தூதுக் குழுவினருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விமானங்களை விடுதலைப் புலிகளுக்கு விற்பனை செய்த நாட்டையும், நிறுவனத்தையும் செக் உளவுப் பிரிவு கண்டறிந்துள்ளது என்று சரளா பெர்னாண்டோ கூறியதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இலங்கைக்கான செக் நாட்டுத் தூதுவர் ஜெரோ மிர் நுவடின், மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு பிரிவின் தலைவர் சோ. விக்னேஸ்வரன் தலைமையில் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-134)

### பயிற்சி நிலையம் நிலையம் திறப்புவிழா

அறவழிப் போராட்டக் குழுவும், உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனமும் இணைந்து நடத்தும் தொழில்சார் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும், மின்னிணைப்பு பயிற்சி ஆரம்ப நிகழ்வும் இன்று முற்பகல் 11மணிக்கு கைதடி நுணாவிலிலுள்ள அறவழிப் போராட்டக் குழு பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

டொக்டர் எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன், வூ ஸ் இலங்கை வதிவிடப் பிரதிநிதி, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் , சிறுவர் பாதுகாப்பு நிறுவன மாவட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7)

### கலந்துரையாடல்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், அவர்களது பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் அறிவித்துள்ளார். (த-7)

## ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே 8ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம்

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எதிர்வரும் 8ஆம் திகதி கிளிநொச்சிக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் மடுமாதா ஆலயத்திற்குச் சென்று அங்கிருந்து கிளிநொச்சிக்குச் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஜெனீவாவில் சந்தித்து உரையாடியதைத் தொடர்ந்தே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஜெனீவா சென்றிருந்த தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நாளை அல்லது நாளை மறுதினம் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-9)

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கு; நெற் களஞ்சியசாலைகளில் சுகாதாரப் பிரச்சினை

(கொழும்பு)

அதிகாரிகளின் அசமந்தப் போக்கின் காரணமாக பல பிரதேசங்களில் நெற்களஞ்சிய சாலைகளின் வசதி தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக கமநல சேவை மற்றும் விவசாயிகளை மேலோங்கச் செய்யும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு சில அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டுமென்று கமநல சேவை மற்றும் விவசாயிகளை மேலோங்கச் செய்யும் அமைச்சர் எஸ்.என். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அம்பாறை, பொலநறுவை, குருநாகல், அனுராதபுரம் பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லை அரிசியாக்கி உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளுக்கு அனுப்பும் படி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இருப்பினும் சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இந்த நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளதாகவும், இவ்வாறான அதிகாரிகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## நிவாரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜனவரி, பெப்ரவரித மார்ச் மாதங்களுக்கான இலவச நிவாரணத்தை இன்று திங்கட்கிழமை முதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாகவும் இலவச நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள மாவட்டச் செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிவாரணத்திற்கு தகுதியுடைய குடும்பங்கள் தமக்குரிய ப.நோ. கூ.சங்கங்களில் இன்று முதல் நிவாரணத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (த)

## சீரழிந்துள்ள கலாசாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜை வருகை காரணமாக நாட்டில் கலாசாரம் சீரழிந்துள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சீரழிந்துள்ள கலாசாரத்தை மாற்றி மீண்டும் நல்லதொரு சமூகத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டியது அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜட்டிநுவர தேசிய பாடசாலையொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்நியர்களின் ஆட்சிக் காலத்தின் போது சீரழிக்கப்பட்ட நாட்டின் நல்லபழக்கவழக்கங்களை மீண்டும் ஏற்படுத் துவதற்கு அனைவரும் முன்வர வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

எமது கலாசாரத்திற்கு ஒத்துவராத வெளிநாட்டு பழக்கவழக்கங்களை நாம் உதறித்தள்ள வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார். (த-9)

## திராட்சை உற்பத்தியாளர்களுக்கு தனி சமாசம் அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் திராட்சை உற்பத்தியாளர்களுக்கென தனியார் ஓர் சமாசத்தை அமைத்துத் தருமாறு கீரிமலை விவசாயப் போதனாசிரியர் திருமதி ப.மணிவர்ணன்- சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரிவில் சுமார் 25 ஹெக்ரெயரில் திராட்சைச் செடி பயிரிடப்படுகிறது. ஆனால் அந்தத் திராட்சைப் பயிர்ச் செய்கைக்கென தனியான சமாசம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இந்தச் சமாசத்தை அமைப்பதற்குப் பல நிறுவனங்கள் உதவ முன் வந்துள்ளதுடன், இதன் மூலம் பல உதவிகளை வழங்கி திராட்சை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க முடியும் இதனால் பல வகையான நன் மைகள் ஏற்படும் என சுட்டிக் காட்டி, இது விடயத்தில் கவனமெடுத்து தனியான சமாசத்தை அமைப்பது சிறந்ததென தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

அவரவர் கடமையை அவரவர்க்கு விதித்தபடி செய்து வருவதே நலம்.

-சுவாமி ராமதாசர்

வலம்புரி

# போர்வாளே! கூடாத கூட்டம் கூடினாயோ

தமிழகத்து அரசியல் வாதிகள் எந்த நேரம் என்ன முடிவை எடுப்பார்கள் என்று சொல்லவே முடியாது.

நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும் இல்லாமல் வாய்ச்சொல்லில் மட்டும் வீரர்களாக இருப்பவர்கள் என்ற பாரதியின் பாடல்வரிகள் தமிழகத்து அரசியல் வாதிகளுக்கானதுபோல் தெரிகிறது.

வெட்டுவேன், விழுத்துவேன் என்றெல்லாம் மேடையேறி முழங்குவார்கள். மறு நாள் கைகோர்த்து உங்கள் வெற்றியே எங்கள் இலட்சியம் என வாய் கூசாமல் கூறிக்கொள்வார்கள்.

இந்த இலட்சணமே தமிழ் நாட்டு அரசியல் வாதிகளின் அணிகலன் எனில் அது மிகையன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்து சென்ற வை.கோபாலசாமி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார்.

தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி ஆட்சியை தனது குடும்பச்சொத்தாக மாற்றி வருகிறார். தனது மகன் ஸ்ராலினை தமிழகத்தின் அடுத்த முதல்வர் ஆக்குவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பது வை.கோபாலசாமியின் கருத்து.

கலைஞர் கருணாநிதி தி.மு.கவை தனது குடும்பச் சொத்தாக ஆக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்ற கருத்தியல் வாதம் எம்.ஜி. இராமச்சந்திரன்,நாவலர் நெடுஞ்செழியன் போன்றோராலும் முன்வைக்கப்பட்டதே.

கணக்குக்கேட்டால் கட்சியில் இருந்துவெளியேறு என கலைஞர் கர்ச்சித்ததனாலேயே எம்.ஜி.இராமச்சந்திரன் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர்.அ.தி.மு.கவை ஆரம்பித்ததனால் கலைஞர் கருணாநிதி தமிழகத்தின் முதல்வர் பதவியை எடுக்கமுடியாமல் போயிற்று. எம்.ஜி. ஆர்.இறக்கும் வரை இந்நிலைமை நீடித்தது.

எம்.ஜி.ஆரின் இறப்புக்குப்பின்னர் அ.தி.மு.கவில் சிறியபிளவுகள் ஏற்பட்டிருந்தாலும் அவை பெருவிருட்சமாக மாறவில்லை.

இதேவேளை கலைஞர் கருணாநிதியின் தி.மு.க. மீண்டுமோர் பிளவை சந்தித்தது. அதுவே வை.கோபாலசாமியால் ஆரம்பிக்கப்பட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகமாகும்.

இவை தமிழகத்து அரசியலின் சிறிய அறிமுகம் அவ்வளவு தான். இதில் வேடிக்கை என்னவெனில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற காரணத்திற்காக வை.கோபாலசாமியை சிறையில் அடைத்தவர் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கிடைக்கும் வரை 19 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த வை. கோபாலசாமி எதிர்வரும் சட்டசபைத் தேர்த லுக்காக செல்வி ஜெயலலிதாவின் ஆ.தி.மு.கவுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார்.எப்படி இருக்கிறது நிலைமை.

'ம.தி.மு.கவை தடைசெய்ய வேண்டும்' என ஜெயலலிதாவும், 'என்னை அடைத்த அதே சிறையில் ஜெயலலிதாவை அடைப்பேன்' எனக்கூறியவை. கோவும் இப்போது ஒன்று சேர்ந்துவிட்டார்கள்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு பேருக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த ஓடித்திரிந்த ஒருவர் இருப்பாரே. அவரின் திருகுதாளம் ....அப்பாடா என்றால் நீங்கள் விடவா போகிறீர்கள்.

அதை விட இருக்கிறார்களே! ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் கடமையாற்றுபவர்களின் வீடுகளுக்குச் சென்று மண்டியிட்டு எங்களின் பேப்பருக்கு வாருங்கள் என்று கெஞ்சும் வஞ்சகக்கூட்டம்.

இவர்களை விடவா அவர்களின் திருகுதாளம் பெரிது... வை.கோவின் செய்தியோடு வாசகர்களின் முணுமுணுப்பும் கேட்கவே செய்கிறது.

# அரசாங்கத் தரப்பின் கருத்துக்கள் அடுத்த சுற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)


ஜெனீவா பேச்சுக்களின் போது போர் நிறுத்த உடன்பாடு திருத்தப்பட்டதாக அரசாங்கத் தரப்பிலிருந்து வெளிவந்திருக்கும் தகவல்கள் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்மென்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விடயத்தில் தற்போது அரசாங்கத்திற்கு வெளிநாடுகள் பலவும் கடும் அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அந்த வட் டாரங்கள் தெரிவித்தன.

போர் நிறுத்த உடன்படிக்கை திருத்தப்பட்டதாக அரசாங்கத்தரப்பில் இருந்து வெளியான கருத்துக்கு புலிகளின் பேச்சுக் குழுவினர் தமது அதிருப்தியை ஏற்கனவே தெரிவித்து விட்டபோதும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை நடை பெறும்போது இந்த விடயம் குறித்து விடு தலைப் புலிகளின் பேச்சுக் குழுவினர் தமது அதிருப்தியை வெளி யிட்டு மேற் படி கருத்திற்கான விளக்கத்தை கோரக் கூடுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் இராணுவநெருக்கு வாரங்கள் ஓரளவு குறைந்துள்ளபோதும் ஜெனீவா பேச்சுக்களின் பின்னரான காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்ற மெதுவும் இடம் பெறாததால் அது குறித்தும் அடுத்த சுற்றுப் பேச்சில் புலிகளின் சுட்டிக்காட்டக் கூடுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-4)

# விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள்

## விளக்கமளிக்கிறார் எரிக்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்காக வானொலி உபகரணத் தொகுதிகளை கொள்வனவு செய்தது அப்போதைய இலங்கை அரசாங்கமே, தவிர, தான் அல்ல என்று நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் முதல்முறையாக தெரிவித்துள்ளார். என்று கொழும்பு நாளேடு செய்தி வெளி யிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த ஏடு வெளியிட்டுள்ள செய்தியில், 'இலங்கையின் அமைதிக்கான பேச்சுவார்த்தைகள்' எனும் நூலுக்கு அளித்த மதிப்புரையில் எரிக் சொல்ஹெய்ம் இதைத் தெரிவித்துள்ளார். அவர் இந்த விடயங்களை 3 வருடங்களுக்குப் பின்னர் வெளிப்படுத்தியுள்ளார்.

'இந்த வானொலி உபகரணங்கள் 6 தொன் எடை கொண்டவை. வானொலி உபகரணங்களை கொண்டுவருமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கமையவே நோர்வே அர சாங்கம் அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டது. நாம் அந்த பொருட்களுக் கான சுங்க நடவடிக்கைகளுக்கு உதவினோம்.

அரசாங்கத்திற்கும் , விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக விடுதலைப் புலிக ளுக்கு இந்த வானொலி உபகரணங்கள் தேவைப்படுவதாக அரசாங்கம் தெரிவித்தது. விடுதலைப்புலிகளுக்கு ஆரம்ப பாட நெறிகளை நாம் வழங் கினோம். இந்த பாடநெறிகளை சிறிலங்கா இராணு வத்திற்கும், கடற்படையினருக்கும் வழங்கியிருந்தோம்' என்று எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

எனினும் எரிக் சொல்ஹெய்மின் கூற்றை பாதுகாப்புத் தரப்பினர் மறுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# சர்வகட்சி மாநாடு இன்று

## ஒப்பந்த திருத்தம் குறித்து கேள்வியெழுப்ப ஐ.தே.க.,ஜே.வி.பி.கட்சிகள் முடிவு

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுவார்த்தைகளின் போது யுத்த நிறுத்த ஒப்பந்தம் திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதா என்பது பற்றி இன்று நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்விஎழுப்ப ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி. பி ஆகியன முடிவு செய்துள்ளன.

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து நாடாளுமன்றத் தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அறிவிப்பதற்காக அனைத்து க் கட்சி மாநாட்டுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மஹிந்தவின் த லைமையில் இன்று திங்கட்கிழமைகாலை10.00 மணிக்கு அலரிமாளிகையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஜெனீவா பேச்சுவார்த்தைகளின் போது யுத்த நிறுத்த ஒப்பந் தம் திருத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பினர் உத்தி யோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில் இது பற்றி மஹிந்தவின் நேரடிபதிலைப் பெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தவிர்த்து ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களும் யுத்த நிறுத்த ஒப்பந்தத் தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எவை என்பது குறித் தும் இம் மாநாட்டில் கேள்வியெழுப்பத் தீமானத்திருப்பதாக தெரிய வருகிறது. (து)

# அம்பாந்தோட்டை வழக்கு

## மஹிந்தவின் எழுத்துமூல வாதங்கள் தாக்கல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை ஆழிப்பேரலை நிதி மோசடி தொடர்பான வழக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் 40 பக்கங்கள் கொண்ட எழுத்துமூல வாதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டன.

அம்பாந்தோட்டை விவகாரம் தொடர்பான புலனாய்வு விசாரணைகளால் அவருடைய அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகத்தெரிவித்து பிரதமராக இருந்த போது மஹிந்த ராஜபக்ஷ அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந் தார்.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோ, குற்றப் புலனாய்வுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் லயனல் குணதிலக, குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரி பி.அம்பவிய , முறைப்பாட்டாளரான ஐ.தே.க. கபீர் காசிம், சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு எழுத்து மூல வாதங்களை சமர்ப்பிக்குமாறு நீதமன்றம் உத் தரவிட்டிருந்தது. சட்டத்தரணி ஏ.வீ.டீ.தர்மதாச, மஹிந்தவின் சார்பில் 40 பக்கங்கள் கொண்ட எழுத்துமூல வாதங்களை நீதிமன்றில் கையளித்தார்.

உண்மைத் தன்மையற்ற கபீர் காசிமின் முறைப்பாட்டிற்கமைய புலனாய்வு பொலிஸார் ஒரு தலைப்பட்சமாகவும் , எதேச்சையாகவும், பக்கசார்பாகவும் மஹிந்தராஜபக்ஷவுக்கு எதிராக விசாரணைகளை நடத்தினர் என்றும் தனிப்பட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மஹிந்தவுக்கு அவப் பெயரை ஏற்படுத்தி மனுதாரரை கடந்த தேர்தலில் தோல்வியுறச் செய்வதை நோக்கமாக கொண்டு நடத்தப்பட்டது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# யாழ்.இராணுவக் கட்டமைப்பில் புதுவருடத்துடன் பாரியமாற்றம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் உள்ள படைக்கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள ஏற்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் கசிந்துள் ளன.

யாழ்.குடாநாட்டில் படைக்கட்டமைப்பில் குறிப்பாக பிரிவுகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற படை உயர் அதிகாரிக ளுக்கு உள்ளக இடமாற்றங்களை வழங்குவதெனவும், அதிருப்தியுடன் இருக்கும் மூத்த படை அதிகாரிகளுக்கு புதியபொறுப்புக்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்பை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

சித்திரைப் புதுவருடத்துடன் இந்தப் புதிய மாற்றங்கள் நிகழவுள்ளன. இதேவேளை, யாழ். குடாவின் படைத் தளபதியாக இருக்கும் டீ.ஏ. சந்திரசிறிக்குப் பதிலாக ஜே.வி. பியின் சிபார்சிற்கு அமைய குடாநாட்டிற்கு புதிய படைத் தள பதியை நியமிப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வரு கிறது. ஜே.வி.பி.யின் யோசனைக்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் பச்சைக் கொடிகாட்டியுள்ளார் என்றும் தெரியவருகிறது. (ச-4)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உயர்ந்த இலட்சியங்களை வாழ்க்கையாகக் கொண்டவர்களே வாழ்க்கையில் உயர்ந்து நிற் பார்கள். தியாகம் செய்பவர்களாலேயே சாதனைகளைப் படைக்க முடியும். பெரிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால தான் சிறிய சாதனைகளை யாவது படைக்க முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# அமைச்சர் பெர்ணான்டோபுள்ளே கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறாரா

## சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கம்

அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயை கிளிநொச்சிக்கு வருமாறு அழைக்க வில்லை என்று தமிழீழ விடுதலைப்புலி களின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா பேச்சு மேசையில் சிறார் தொடர் பான விடயங்களை அமைச்சர் பேரியல் அஸ் ரப் பேசியதற்கு பதிலளிக்கும் போது உங்கள் அரசாலும் படைகளாலும் துன்பப்படுகிற ஆயிரக்கணக்கான குழந்தைகளை எங்கள் தலைவர் எப்படி பாதுகாத்து அவர்களது எதிர் காலத்துக்கான வேலைத்திட்டங்களைச் செய்து வருகிறார் என்பதை நீங்கள் நேரில் வந்தால் காட்டத் தயாராக இருக்கிறோம் என்று நாம் கூறியிருந்தோம்.

அதைத்தவிர எந்த அமைச்சருக்கும் நாம் அழைப்பு விடுக்கவில்லை என்றார் தமிழ்ச் செல்வன். அமைச்சர் ஜெயராஜ் பெர் ணான் டோப்புள்ளே இம் மாதம் 16,17 ஆகிய நாட் களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு பயணம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

முதலில் கிளிநொச்சியில் இருக்கும் விடு தலைப்புலிகளின் அரசியல் தலைமையகத் திற்கு பயணம் செய்யும் ஜெயராஜ் பெர்ணான் டோபுள்ளே அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுவார் த்தைகளை நடத்துவார் என்றும் அச் செய்தி யில் கூறப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசத்தில் உள்ள பாதைகளைப் புனரமைப் பது தொடர்பாக அமைச்சர் தனது பயணத் தின்போது கவனம் செலுத்துவார் என்றும் கிளிநொச்சிக்குச் சென்று மீண்டும் கொழும்பு நோக்கி புறப்படும் வரை அமைச்சருக்கான பாதுகாப்பினை விடுதலைப்புலிகள் வழங்கு வதாக அறிவித்துள்ளனர் என்றும் அச் செய் திகள் தெரிவித்திருந்தன. (ச-4)

### உடன்படிக்கை திருத்தப்பட்டதா

# விளக்கமளிக்குமாறு ஐ.தே.கட்சி சமாதான செயலகத்திற்கு கடிதம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதா என்பது குறித்து தெரிவிக்குமாறு சமாதான நடவடிக்கைகளுக்கான ஒருங்கி ணைப்புச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜோன் குணரட்ணாவிடம் ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலை வர் கருஜெயசூரியா சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடி தத்தில் இவ்வாறு கோரியுள்ளது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் தொடர் பில் மாறுப்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதனால் அவ்வாறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருந்தால் தெளிவான விளக்கத்தை வழங்குமாறு கேட்டுள்ளார்.

இன்று நடைபெறுகின்ற சர்வ கட்சி மாநாட் டிற்கு வருமாறு ஜோன் குணரட்ண விடுத்த அழைப்பிற்கு பதிலளிக்கும் வகையில் கரு ஜெயசூரியா இக் கடிதத்தை அனுப்பிவைத் துள்ளார். (ச-5)

# ஆறு அகதிகள் தமிழகம் சென்றனர்

(கொழும்பு)

இலங்கை தமிழ் அகதிகள் ஆறு பேர் நேற்று முன்தினம் தமிழகத்திற்குச் சென்ற னர்.

இவ் ஆறுபேரில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.அமைப் பில் சாரதியாக இருந்த ஒருவரும் அங்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

பேசாலையில் இருந்து இவர்கள் படகு கள் மூலம் தனுஷ்கோடி அரிக்கல் முனை னையை சென்றடைந்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபாகரன் (வயது 29) அவரது மனைவி பாமா (வயது 20) ஆகியோர் தமது 11 மாதக் குழந்தையுடன் பேசாலையில் இருந்து மண் டபம் வேதானைக் கடற்கரையை சென்ற டைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இருந்து கடந்த இரண்டு மாதங்களுக்குள் 500 க்கும் மேற்பட்டோர் இந்தியா சென்றுள்ளதாக சென்னைச் செய் திகள் தெரிவித்தன. (ச-4)

# இராணுவச் சிப்பாய் சுட்டுக்கொலை

(வாழைச்சேனை)

வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேசத் தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி இரண்டாம் படைப்பிரிவைச் சேர்ந்த முஹமட் நவாஸ் (வயது 22) என்ப வரே உயிரிழந்தவராவார்.

நண்பர் ஒருவரின் வீட்டில் அவர் கதைத் துக்கொண்டிருந்த சமயம் அங்கு வந்த இனந்தெரியாத மூவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

9 மில்லி மீற்றர் துப்பாக்கியினால் இவரது நெஞ்சில் மூன்று முறை துப்பாக்கிப்பிர யோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவரது சடலம் வாழைச்சேனை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித் தனர். (ச-4)

# இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கு தயாராகி வரும் அரச குழுவினர்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண் டாம் சுற்றுப் பேச்சுக்களில் பேசவுள்ள விட யங்கள் குறித்து அரச தரப்பு தயாராகி வரு வதாக தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப்புலி களுடன் ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ள 2 ஆம் சுற்றுப் பேச்சுக்களுக்கு அரசாங்கக் குழு கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் இது தொடர் பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

சுமார் 2 அரை மணித்தியாலம் நடை பெற்ற இந்தக்கூட்டத்தில் அரசாங்கக்குழு வில் அங்கம் வகித்தவர்களில் பெரும்பான் மையானோர் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.யினரும் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் சுற்றுப்பேச்சுவார்த்தையில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற் றுதல் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைகக்கூடும் என்று எதிர்பார்ப்பதாக அரசாங்ககுழு உறுப்பினர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

அதி உயர் பாதுகாப்பு வலய பிரச்சினை யை விடுதலைப்புலிகள் முன்வைக்கும் போது அதற்கு மாற்றாக யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துக்களைப் பற்றி பேசாமல் பொதுவான மனித உரிமை மீறல் பற்றி பேச அரசாங்கக் குழு திட்டமிட்டு வருவதாகவும் அந்த உறுப் பினர் கூறினார். (ச-4-5)

# தமிழ்ச்செல்வன் குழுவினர் நாளை நாடு திரும்புகின்றனர்

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற் காக ஜெனீவா சென்றிருந்த தமிழீழ அரசி யல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வன் தலைமையிலான குழுவினர் நாளை நாடு திரும்பவுள்ளனர். தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இன்று பிற்ப கல் ஜெனீவாவில் இருந்து புறப்படுகின்றனர்.

நாளை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் இவர்கள் விமா னப்படையினரது விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல்லவுள்ளனர்.

இக்குழுவினர் நேற்று நாடு திரும்புவார் கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் நோர்வே யில் முக்கிய சந்திப்புக்களில் இவர்கள் ஈடு பட்டமையினால் வருகை தாமதமடைந்துள்ளது.

ஜெனீவா சென்ற விடுதலைப்புலிகளின் குழுவினர் நோர்வேக்கு விஜயம் செய்து அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோனாஸ்கர் ஸ்தேர்விற் உட்பட பலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இச் சந்திப்பின் போது யுத்த நிறுத்த ஒப் பந்தத்தினை திருத்தியுள்ளதாக அரசாங்கத் தரப்பினர் கருத்துவெளியிட்டுள்ளமை தொடர்பில் கடும் கண்டனத்தை விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினர் தெரவித்துள்ள னர். (ச-4)

# புலிகளின் அறிக்கை குறித்து...

இவ் ஆவணங்களை உரிய அதிகாரிகள் படித்துப் பார்த்து எவ்வாறான நடவடிக்கை களை மேற்கொள்ளலாம் என்று தமக்குத் தெரிவிக்குமாறும் மகிந்த ராஜபக்ஷ கோரி யுள்ளார்.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுக்கள் பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகள், அதி உயர் பாதுகாப்பு வலயத் தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் விபரங்கள், மீன்பிடித் தடைகள் ஆகியன தொடர்பான ஆவணங்களை விடுதல்லைப் புலிகள் கையளித்திருந்தனர்.

அரச படைகளும் துணை இராணுவக் குழுக்களும் என்ற விடுதலைப்புலிகளின் 37 பக்க ஆவணமானது ஜனாதிபதியை யும் படைத்தளபதிகளையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., கருணா ,ஜிகாத் குழுக்கள் பற்றி அந்த ஆவ ணத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

ஆயுதக்குழுக்களை யார் இயக்குகிறார் கள் அந்தக்குழுக்களின் தலைவர்களினது கையடக்கத் தொலைபேசி எண்கள்,இந்தக் குழுக்களின் முகாம்கள் ஆகியவை அந்த ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

இந்த துணை இராணுவக்குழுக்களினால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இடம்பெற்றி ருந்தவர்கள் பெயரும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கருணா குழுவினருக்காக கொழும்பு தனியார் வர்த்தக வங்கிகள் இரண் டில் தமிழ் வர்த்தகர்கள் இருவர் பெருந் தொகைப் பணத்தை வைப்புத் தொகையாக செலுத்தியுள்ளமையும் அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அந்த இரு தமிழ் வர்த்தகரும் அச்சுறுத் தலின் பேரில் இந்தத் தொகையை செலுத்தி யிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா குழுவுக்கும் இராணுவ அதிகாரி களுக்கும் இடையேயான உறவுகளை விள க்கும் கொழும்பு ஆங்கில பத்திரிகைகளின் கட்டுரைகளும் அந்த ஆவணத்தில் இணைக் கப்பட்டுள்ளன.

மேலும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் அரச படைகளால் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன் முறைகள் தொடர்பான 73 பக்க அறிக்கை யையும் விடுதலைப்புலிகள் கையளித்துள் ள தாக தெரிவிக்கப்பட்டது. (ச-4-5)

# தாக்குதல் சம்பவங்கள்...

கண்டிப்பதாகவும்,மிலேச்சத் தனமாக கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தி னருக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவிப்பதாகவும் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ச-4)

# மாணவர் சமூகத்தினரால்...

களையும் விரிவுரைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

துணிவில்லா ஆக்கிரமிப்பு இராணுவம் சிறுவர்கள் மீது பலத்தைக்காட்டுவது நடை பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களை சீர் குலைக்கும் ஒரு நிகழ்வாகவே மாணவர் சமூக மாகிய நாம் கருதவேண்டியுள்ளது என தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்களை தொடர்ந்து மாணவர்களாகிய நாம் கைகட்டிப்பார்க்கப் போவதில்லை. இராணுவம் தொடர்ச்சியாக மாணவர்கள் மீது தாக்குதல்களை மேற் கொள்ளுமானால் இராணுவத்திற்கு எதிராக எமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச)

# யாழ்.கல்விச்சமூகத்தினருக்கு...

பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி அவர்கள் கடந்த 02.03. 2006 அன்று யாழ்.மாவட்டத்தில் உள்ள வலயக் கல்விப்பணிப்பாளர்களை அழைத்து மிகக்க டுமையாக எச்சரித்து அனுப்பியுள்ளார்.

வெளிப்படையாக பத்திரிகைகளில் கலந் துரையாடல் என்று கூறப்பட்டிருந்தாலும் அப்படி இல்லாமல் அந்தச் சந்திப்பு ஒட்டு மொத்த கல்விச் சமூகத்தையே மிரட்டி பணி யவைக்கும் நோக்கிலேயே நடைபெற்றுள்ளது.

இவை எல்லாம் சிவில் நிர்வாகத்தில் அதி கரித்து வரும் படையினரின் தலையீட்டி னையே வெளிப்படுத்துகின்றது. அதாவது பாடசாலை மாணவர்களை புலிகளே அழைத் துச் சென்றனர் என்றும் இவ்வாறு எதிர்காலத் தில் மாணவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டால் கல்வி அதிகாரி களும் ,அதிபர்களும் ,ஆசிரியர்களும் கடு மையான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் மிரட்டப்பட்டுள்ளனர்.

இது விடயத்தில் படையினரின் அநாவசி யமான தலையீட்டை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது தொடர்பாக உடன் விசாரணைகளை மேற்கொண்டு சுமூகமான கற்றல் சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக் கும்படி அன்புடன் வேண்டுகின்றேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 06.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.